சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

51. உளவாளிகளின் குறுதிசயம்

அந்தச் சட்டைக்காரன் வேறு யாருமில்லை, மந்திராலோசனைச் சபையின் வாயில் காவலன்தான். கோவிற் சிலைகளிலே சில துவாரபாலகர் விழிக்கிறார்களே, அதே விழி!

அனுமதியின்றி எவரும் உள்ளே வந்துவிடக் கூடாதல்லவா? எனவே, பார்த்தவர்கள் பயந்து விலகுமாறு தீப்பொறி பறக்கும் பயங்கரமான பார்வையுள்ள ஓர் அரக்கன் இந்த வாயில் காவலனாக நியமிக்கப் பட்டிருக்கிறான்.

'ஒற்றர்களை இங்கே வரவிடுக' என்று ராவணன் உடனே அனுமதியளித்தான். இவர்களும் உள்ளே வந்து சக்கரவர்த்தி பாதங்களில் வணங்கினார்கள்.

அப்போது அவர்கள் நிலை இது:

மணிக்கண் வந்(து)அவன்
 பாதம் வணங்கினார்,
பணிக்கை வன்குரங்
 கின்படர் சேனையை
நினைக்குந் தோறும்
 திடுக்கிடு நெஞ்சினர்,
கனைக்குந் தோறும்
 உதிரங்கள் கக்குவார்

[மணிக்கண் வந்து – அந்த ஆலோசனைச் சாலையிடம் வந்து. பணிக்கை வன் குரங்கின் – பனைமரம் போன்ற வலிய கைகளையுடைய குரங்குகளின். படர் சேனையை – பரவிய சேனையை. உதிரம் – இரத்தம்.]

பாசறையில் பட்ட பாடு

ஒற்றர்கள் ராவணன் பாதத்தை வணங்கி நிற்கும் போதும், இந்தச் சபையையோ இங்குள்ள அரக்கர்களையோ பார்க்கவில்லையாம். பாசறையில் பார்த்த அந்த முரட்டுக் குரங்குகளின் சேனைதான் இங்கும் தொடர்ந்து குத்திக் கொண்டே வந்து விட்டது போலத் தோன்றுகிறது! நெஞ்சு திக்குத் திக்கென்று அடித்துக் கொள்கிறது. அவர்கள் குரங்கு – வேடம் பூண்டல்லவா போயிருந்தார்கள்! இப்போது இங்கே எல்லா ராட்சஸ மூஞ்சிகளும் எப்படியோ குரங்கு – வேடமாகிப் பயமுறுத்துகின்றன!

இப்போதும் இருமி இருமி இரத்தம் கக்குகிறார்களாம். அங்கே முதுகிலே விழுந்த குத்துக்களால் இருமத்தான் செய்கிறார்களா? ஏதோ குதிரை கனைப்பது போல் அல்லவா தோன்றுகிறது!

நினைக்குந் தோறும்
 திடுக்கிடு நெஞ்சினர்,
கனைக்குந் தோறும்
 உதிரங்கள் கக்குவார்

என்று எவ்வளவு எளிமையான பாஷையில் எவ்வளவு நகைச்சுவையுடன் ராமனது பாசறையில் ஒற்றர் பட்ட பாடெல்லாம் அவர்கள் பேசுவதற்கு முன்பே விளக்கமாகி விடுகின்றன!

செய்தி சொல்லும் கலை

அனுமதி பெற்று உள்ளே வந்தவர்கள் அனுமதி பெற்றுத்தான் பேசுகிறார்கள். 'உம் அடியார்களாகிய நாங்கள் அந்த வானர சேனையை முடியக் கணத்தான் முயன்றோம்; எனினும் முற்றும் கண்டோமில்லை!' என்று ஆரம்பிக்கிறார்கள்.

'வானரர்கள் மலைகொண்டு வீசிக் கடலை அடைத்த செய்தியை நாங்கள் வந்து சொல்லித்தானா தாங்கள் தெரிந்து கொள்ளப் போகிறீர்கள்! அப்போது படாத பாடுபட்ட கடலின் நீர்த் தேவதையே இங்கு வந்து சொல்லியதில்லையோ!' என்று அவ்வளவு அதிசயமாக அந்தச் செய்தியைச் சொல்லுகிறார்கள்.

கடற் பரப்பை நோக்கிய ராமன் அந்தக் கடல்-தெய்வம் வராமலிருந்து

விட்டதே என்று சீறிக் கடலைத் தவிக்கச் செய்தானல்லவா! அந்தச் செய்தியைத் தான் எவ்வளவு ரஸமாக இவர்கள் அனுபவித்துச் சொல்லுகிறார்கள்!

எல்லை நோக்கவும்
எய்தில தாம்எனும்
சொல்லை நோக்கிய
மானுடன், தோளெனும்
கல்லை நோக்கிக்
கணைகளை நோக்கித்தன்
வில்லை நோக்கவும்,
வெந்தது வேலையே!

[எல்லை – கடல் எல்லையை. எய்தில தாம் – கடல் தெய்வம் வாராமல் இருந்து விட்டதே. கணைகள் – பாணங்கள். வேலை – சமுத்திரம்.]

இது இவர்கள் சொல்லும் மூன்றாவது செய்தி. அடுத்த செய்தியாகப் பாசறையில் நடந்த விபீஷண பட்டாபிஷேகத்தைக் குறிப்பிடப் போகிறார்கள்.

இதைத் தான் ராவணனுள்ளத்தில் நிலை நிற்கும்படி எவ்வளவு திறமையாக வெளியிடுகிறார்கள்!

தாரு லாமணி
மார்ப! நின் தம்பியே
தேரு லாவு
கதிரும் திரிந்து,தன்
பேரு ளாவும்
அளவினும் பெற்றனன்,
நீரு லாவும்
இலங்கை நெடுந்திரு.

[தார் – மாலை உலா மணி மார்ப – உலாவுகின்ற அழகிய மார்பை உடைய வனே தேர் உலாவு கதிரும் – நேரில் நாள்தோறும் உலாவுகின்ற சூரியனும். நீர் உலாவும் – கடல் நீர் சுற்றி உலாவப் பெற்ற இலங்கை நெடுந்திரு—இலங்கா பட்டணத்தின் பெருஞ் செல்வம்.]

இலங்கைப் பெருஞ் செல்வத்தை விபீஷணன் பெற்று விட்டதாகவே பேசித் தீர்த்து விடுகிறார்கள், ஆம்; அதைத் தீர்ந்து போன ஒரு நிகழ்ச்சியாகவே குறிப்பிடுகிறார்கள்.

பிறகு சேது பந்தனச் செய்தியை ஐந்தாவது செய்தியாகக் குறிப்பிடுகிறார்கள். ஆனால் இந்தச் செய்தியும் வேண்டுமோ! தூது வந்த அனுமன் படுத்திய பாடு போதாதோ! அதற்குமேல் ஒரு புதிய வலிமையையா இந்தச் சேது பந்தனத்திலே காண்கிறோம்!

இவ்வளவு சாதுரியமாகச் செய்தி சொல்லி வந்தவர்கள், எவ்வளவு திறமையும் முஷ்டி பலமும் உள்ள வானரர்களாலும் எங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று பெருமை யடித்துக் கொள்கிறார்கள். 'உம் தம்பிதான் காட்டிக் கொடுத்தான்' என்று அந்த வயிற்றெரிச்சலையும் கிளப்பி விடுகிறார்கள்.

தங்களைக் கட்டி முதுகிலே குத்து விழ விழ ராமனிடம் கொண்டு போய்க் காட்டிய அந்த அவமானக் கதையையும் ராவண சபையில் சொல்லாமல் விட்டு விடவில்லை, விவரமாகவே ராவணன் காதில் போட்டு வைக்கிறார்கள்.

பற்றி வானர
வீரர் பணைக்கையால்
எற்றி எங்களை
எண்நெடுந் தோள்இறச்
சுற்றி ஈர்த்(து)அலைத்
துச்சுடர் போல்ஒளிர்
வெற்றி வீரற்குக்
காட்டி விளம்பினன்.

[பற்றி–விபீஷணன் எங்களைப் பற்றிக் கொண்டு. வானர வீரர் பணைக்கையால் – வானர வீரர்களின் பனை மரம் போன்ற கையால். எற்றி எங்களை – எங்களைக் குத்தி. எண் நெடுந் தோளிறச் சுற்றி – எங்களுடைய பெருமை பெற்ற தோள் நொறுங்க இறுக்கிச் சுற்றிக் கட்டி. ஈர்த்து அலைத்து – அங்கு மிங்கும் இழுத்தும் அலைத்தும் கொண்டுபோய். சுடர்



போல் ஒளிர் வெற்றி வீரற்கு—சுடர் போல ஒளி வீசுகின்ற வெற்றி வீரனுன ராமனுக்கு.]

தங்கள் அவமானத்தையும் இவ்வளவு விவரமாகக் குறிப்பிடுவோர் சொல்வதெல்லாம் உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என்று ராவணன் நம்புவானல்லவா? எஜமானனுடைய நம்பிக்கையைப் பெறுவதுதான் உளவாளிகளின் முக்கிய நோக்கம். செய்தி சொல்வதையும் ஒரு கலையாகப் பயின்



றிருப்பவர்கள் இந்த ஒற்றர்கள்—இல்லையா!

கடைசிச் செய்தி

கடைசியாக ஒற்றர்கள் ராமனது வீரமும் ஈரமும் ஒருங்கே பொருந்திய உள்ளத்தைச் சபையில் புலப்படுத்தித் தாங்கள் ஒற்று அறிந்து வந்த பொருளையெல்லாம் ராவணனுக்கு அர்ப்பணிக்கிறார்கள்!

'சரங்கள் இங்(கு) இவற்
றின்பண்டு தானுடை
வரங்கள் சிந்துவன்'
என்றனன் 'மற்றெமைக்
குரங்க லாமை
தெரிந்தும்அக் கொற்றவன்
இரங்க, உய்ந்தமை
ஈதெங்கள் ஒற்றெ'ன்றார்.

[சரங்கள் இங்கு இவற்றின்—இங்குள்ள இந்தப் பாணங்களினால். பண்டு தானுடை வரங்கள் சிந்துவன்—பண்டே ராவணன் பெற்றிருக்கும் வரங்களையெல்லாம் சிதறடித்து விடுவேன். மற்று எமை—மற்றும் எங்களை. குரங்கு

அலாமை தெரிந்தும் — நாங்கள் குரங்குகள் இல்லை என்ற உண்மை தெரிந்த பின்பும். கொற்றவன் — வெற்றி வீரனான ராமன். இரங்க — எங்கள் மீது இரக்கம் கொள்ள. உய்ந்தனம் — நாங்கள் தப்பிப் பிழைத்து வந்து விட்டோம். ஈது எங்கள் ஒற்று — இது நாங்கள் ஒற்றி வந்த பொருள்.]

இப்படிச் சொன்ன பின்பு வேறு சில விஷயங்களையும் சொல்லித் தங்கள் மன்னனை வாழ்த்துகிறார்கள் ;

மற்றும் யாவையும்,
வாய்மைய வானவன்
சொற்ற யாவையும்
சோர்வின்றிச் சொல்லினர்;
'குற்றம் யாவையும்
கோளொடு நீங்குக ;
இற்றை நாள்முதல்
ஆயுஉண் டாகென்றார்.

[வாய்மைய வானவன் — சத்திய மூர்த்தியான ராமபிரான்- சொற்ற — சொன்ன. சொல்லினர் — சொல்லியவர்களாய். கோளொடு — மாறுபாடுகளுடனே. இற்றை நாள் முதல் — இன்று முதல். ஆயு — ஆயுள். உண்டாக என்றார் — உண்டாகுக என்று வாழ்த்தினார்கள்.]

எஜமானன் வெறுக்கத் தக்க விஷயங்களையும் ஒற்றர்கள் சொல்லித் தீர்க்க வேண்டியவர்களே. எனவே தாங்கள் கண்டதையும் கேட்டதையும் உள்ளவாறு ராவணனுடைய செவிகளில் போட்டு விட்டார்கள்.

ராமபிரான் அனுப்பிய ஏழு பாணங்களைப் போன்ற அந்தச் செய்திகளையும் இந்த இருபது செவித் தொளைகளிலும் சாமர்த்தியமாகச் செலுத்தி விட்டார்கள்.

எல்லாக் குற்றங் குறைகளுக்கும் பிராயச்சித்தமாக 'எங்களரசே! இன்று முதல் தாங்கள் புதியதொரு நீண்ட ஆயுள் பெறவேணும்' என்று வாழ்த்துகிறார்கள்.

அப்படி வாழ வேணுமென்றால், ராவணேச்வரன் மாறுபாடான புத்தியை விட்டுக் குற்றம் களைந்து குணம்கொண்டு தன்னைச் சீர்திருத்திக் கொள்ள வேணும் என்பதையும் வற்புறுத்தி விடுகிறார்கள்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் ராவணனை ஆதரிப்போர்களில் முக்கியமானவன் சேனைத் தலைவன். இவனை நோக்குகிறான் ராவணன்.

ராமாயண கதா பாத்திரங்களில் சுக சாரணர்களை ஓர் இரட்டைப் பிறவி என்று சொல்லலாம். 'சுகன் இவன், சாரணன் அவன்' என்று விபீஷணன் வேறுபடுத்தி ராமனுக்குக் காட்டிய போதிலும், இவ்விருவரும் இரண்டு தனிப்பட்ட பாத்திரங்கள் அல்லர்!

ராவண ராஜ்யம் என்ற ராணுவ ராஜ்யம், இவ் விருவரையும் ஒரே அச்சில் வார்த்தெடுத்த உளவாளிகளாக்கி அடிமை கொண்டிருக்கிறது ; தனிப்பட்ட பண்புகளைத் தட்டி எறிந்துவிட்டு ஈருடலால் இயங்கும் ஒரே யந்திரமாகச் செய்து விட்டிருக்கிறது !

'இரண்டு இலைகள் ஒரே மாதிரி இருப்பதில்லை ; இரண்டு கட்டை விரல்கள் ஒரே அச்சில் உருவாக்கப்பட்டவை அல்ல......' என்பது அனைவரும் அறிந்ததே. ஒரு முகம் போல் வேறொரு முகம் இருப்பதில்லை ; ஒருவர் குணாதிசயம் போல் வேறொருவர் குணாதிசயம் இருப்பதில்லை. இது ஓர் இயற்கை விதி ; இயற்கையூடு கலந்து எங்கும் பரந்து கிடக்கும் தெய்வ நியதி. ஆனால் இயற்கை விதிகளையும் தம் மதியால் மாற்றி ஒரு புதிய உலகத்தை விசுவாமித்திர சிருஷ்டியாகச் செய்து விடலாம் என்பது ராவணனைப் போன்ற சர்வாதிகாரிகளின் கருத்து.

எனவே தான் சுக சாரணர்களைப் போன்ற விந்தை மனிதர்களை — தனித்தன்மை இல்லாதவர்களை — ராவண ராஜ்யத்தில் பார்க்கலாம். ராவண ராஜ்யம் என்பது ஒரு மகா ராட்சஸ யந்திரம் ; அதன் ஒரு மிகச் சிறிய உறுப்பாக அமைந்து சக்கரத்துள் சக்கரமாகச் சுற்றித் திரிந்து பணி செய்வோர் சுக சாரணர்கள்.

'கெடுவான் கட்டளையிட நாங்கள் உளவாளிகளாக இங்கு வந்தோம் ; இது எங்கள் வினை' என்று தலையிலடித்துக் கொண்டார்கள் அல்லவா ராமன் முன்பு! அக்கொடிய மாயப் பிடிப்பிலிருந்து இவர்களா தப்ப வல்லவர்கள் !

இருவரும் கோழைகள், தர்ம சம்பத்தில் ஏழைகள். நடிப்புக் கலையில் நிபுணர்கள் ; தங்கள் தொழிலுக் கேற்ற படிப்புள்ளவர்கள். சொல் வன்மையுண்டு ; மித்திர பேத ஆற்றல் உண்டு. சர்தர்ப்ப வாதிகள்.

இந்த உளவாளிகளைக் கம்பன் எவ்வளவு ரசமாக, எத்தகைய நகைச் சுவையுடன் தன் காவிய மேடையில் நிறுத்தி நடிக்க விடுகிறான் !

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

52. தழுவலா, மொழிபெயர்ப்பா?

சில வாரங்களாக வால்மீகியை மறந்து கம்பனது கலா சிருஷ்டிகளையே கண்டு களித்து வந்தோம். 'முதல் நூலை மறந்து விட்டீர்களா?' என்று மெல்லக் கேட்கிறார் ஒரு நண்பர். 'ஆதி காவியத்தை மறந்து விடவில்லை; கம்பனது என்றும் புதுமையான கலா சிருஷ்டிகளை அனுபவித்த நம் முன்னோர்களில் ஒரு ரஸிகர் இக் கவிஞனை "முதல் நூல்-திருவழுந்தூர்க் கம்பன்" என்றே குறிப்பிட்டிருக்கிறார்' என்று பதில் சொன்னேன்.

நண்பர் நான் சொன்னதைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. 'கம்ப ராமாயணத்தை முதல் நூல் என்று எப்படிக் கூறலாம்! வால்மீகத்தின் வழி நூல் தானே; தழுவல்தானே!' என்றார்.

'ஆதி காவியத்தின் மொழிபெயர்ப்பே கம்பன் காவியம்!' என்று சொல்லி, 'அந்த வாக்கியத்தை மொழி பெயர்த்திருக்கிறான்; இந்த வாக்கியத்தை மொழி பெயர்த்திருக்கிறான்!' என்றெல்லாம் ஆதாரம் காட்டும் பண்டிதர்களை இன்றும் காண்கிறோம். 'தனது மொழிபெயர்ப்பு நூலைத் தமிழ்க் கவிஞன் ஒரு முதல் நூலின் ஸ்தானத்திற்கே உயர்த்தி விட்டான்!' என்று வாதாடிய ஒரு தமிழ்ப் பெரும் புலவரையும் நாம் அறிவோம்.

ஷேக்ஸ்பியரும் கம்பனும்

ஆனால் கலாசிருஷ்டிகளை 'மொழி பெயர்ப்பு' என்றோ 'தழுவல்' என்றோ கூறுவது பொருந்துமா? ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கிலக் கம்பன், கதைகளையும் சில விவரங்களையும் கூட ப்ளூடார்க் முதலான ஆசிரியர்களிடமிருந்து அள்ளிக் கொண்டிருக்கிறான். என்றாலும், அதே குறிப்புக்களையும் விவரங்களையும் கொண்டு தொகுத்துத் தான் புதுமையாக இயற்றிய கலாசிருஷ்டியைக் 'கலையமுதம்' என்ற தனிப் பெருங் கடவி விருந்தல்லவா கவர்ந்து கொண்டிருக்க வேண்டும்! ஷேக்ஸ்பியரின் இந்தக் கலா சிருஷ்டி மர்மத்திலே நமது கம்பனும் கைதேர்ந்தவன் என்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது.

ஷேக்ஸ்பியருக்குக் கதை முதலான விவரங்களை உதவிய ஆசிரியர்களைப் போல் ஒரு சாதாரண ஆசிரியரல்லர் நமது வால்மீகி பகவான். ஹோமரைப் போல் இதிகாச உலகில் ஓர் அற்புத மேதை அவர். அத்தகைய முதல் நூலை உள்ளபடியே அனுபவித்த எந்த மேதாவியும் அதே கதைகளையும் விவரங்களையும் வைத்துக் கொண்டு ஒரு புத்தப் புதிய கலாசிருஷ்டி செய்து விடுவதென்பது கனவிலும் நினைக்க முடியாத காரியமே. ஆனால் வேறு எந்த மேதாவியும் நிகழ்த்த முடியாத ஓர் அற்புதத்தைக் கம்பன் நிகழ்த்தி விட்டான் என்பதற்குக் கம்ப ராமாயணமே சான்று தருகிறது.

இத்தகைய ஆச்சரிய முயற்சி மகா காவிய உலகில் வேறு எங்கும் நடைபெற்றதாகத் தெரியவில்லையென்று பெரும் புலவர்களும் பேரறிஞர்களுமான வ. வே. சு. ஐயர், கே. என சிவராஜ பிள்ளை, குமரேச பிள்ளை முதலியவர்கள் துணிந்து ஒரு முகமாய்க் கூறியிருக்கிறார்கள்.

ஷேக்ஸ்பியரின் கதைகளையும் விவரங்களையும் வைத்துக் கொண்டே வேறொரு மேதை வேறொரு பாணியில் அமர நாடகங்கள் எழுதிப் புகழ்பெற முடியுமா! ஹோமர், வர்ஜில், கேதே முதலான மகா கவிகளை மொழி பெயர்த்தோ தழுவியோ எந்தப் புதிய மேதையும் ஒரு புத்தப் புதிய கலா சிருஷ்டியை நிலை நாட்டிவிட முடியுமா! எனினும் வால்மீகியின் கதையை வைத்துக் கொண்ட கம்பன் செய்திருக்கும் வீர காவியம் ஓர் இலக்கியப் புதுமைதான், புத்தப் புதிய கலாசிருஷ்டிதான் என்பது குறித்து



இந்த இரண்டு பெரு நூல்களையும் உள்ள படியே ஒப்பிட்டுப் படித்த அறிஞர்களுக்குச் சந்தேகமே இருக்க முடியாது.

வேறுபாடுகளும் மாறுபாடுகளும்

தழுவலோ மொழி பெயர்ப்போ கதை யளவில்தான், கலா சிருஷ்டியில் அல்ல என்பது, கம்பனைக் கற்கும் முறை தெரிந்து கற்றிருப்பவர் அனைவரும் நன்கறிந்ததே. வால்மீகமும் கம்ப ராமாயணமும் இரு வேறு கலா சிருஷ்டிகள்; குண சித்திர வளர்ச்சியிலும் வேறு முக்கியமான கலையம்சங்களிலும் 'அது ஒரு சித்திரம்; இது ஒரு சித்திரம்!' என்று ரஸிகர்கள் வேறுபாடு கண்டு அனுபவிக்க வேண்டிய கலா சிருஷ்டிகள். இந்த உண்மையை இரண்டு நூல்களையும் பன்முறை பயின்றிருப்பவர்கள் தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

கதா காலட்சேபங்களில் ஈடுபடுவோர் இவ்வுண்மையை உணர்ந்து கொள்ளாமல் வால்மீகத்தோடு கம்பனையும் சேர்த்துக் குழப்பிப் பரிமாறுவது, கேட்பவர் உள்ளங்களில் மயக்கத்தை விளைப்பதும் உண்டு. பலரும் ஆழ்ந்த ஆராய்ச்சி இல்லாமலே ஸ்தூலமாகப் பார்த்து இலக்கியத் துறைகளில் அபிப்பிராயங்களைப் பரிமாறுவதும் குழப்பத்தை அதிகரிக்கச் செய்து விடுகிறது.

கதைப் போக்கிலும், கம்பன் வால்மீகத்தினின்றும் எத்தனையோ மாறுதல்களைச் செய்து கொண்டிருக்கிறான். வேறுபாடுகளுடன் மாறுபாடுகளும் உண்டு.

வாசகர் பலரும் நுனிப்புல் மேய்ச்சலாகவே ராமாயணம் கற்பதால் இந்த உண்மையைக் கூட நன்குணர்ந்து கொள்வதில்லை. காண்டங்களின் பெயர்களும் வால்மீகத்திலிருப்பது போல் அப்படியே அமைந்திருப்பதால், 'சரி, சரி; அதுவும் இதுவும் ஒன்றுதான்' என்று எளிதில் சொல்லி விடத் தோன்றுகிறது.

கம்பன் காலத்திலே வால்மீகி ராமாயணம் தமிழ் நாட்டிலே மிகவும் பிரசித்தமாயிருந்தது. ஸ்ரீ வைஷ்ணவப் பிரசாரகர்கள் வால்மீகத்தை முக்கிய ஆதாரமாகக் கொண்டே தங்கள் சமயக் கொள்கைகளைப் பரப்பி வந்தார்கள்: சோழர்கள் சைவத்தில் அழுத்தமான பற்றுள்ளவர்களாயிருந்த போதிலும் ராமபிரானைத் தங்கள் சூரிய குல முதல்வனாகப் போற்றுவாராயினர்.

'மதுர இராமாயண கதை உரை செய்த வான்மிக பகவனும்' என்று உமாபதி சிவம் என்ற சைவ ஆசாரியர் குறிப்பிடுவதை, வால்மீகி மகரிஷிக்கும் அவரது ராமாயணத்திற்கும் தமிழகத்தில் ஏற்பட்டிருந்த எல்லையற்ற செல்வாக்கிற்கு ஒரு சான்றாகக் காட்டலாம். இந்த நிலையில் வால்மீகியின் கதைப் போக்கிலிருந்து வெளிப்படையாக மாறுபட்டுக் கம்பன் கலா சிருஷ்டி செய்திருந்தால் கம்ப ராமாயணத்தை விரும்பிக் கற்பவர் யார்?

வால்மீகத்திலே கம்பனும் மோகித்துக் கிடந்தான் என்பதற்கு, 'வாங்கரும் பாத நான்கும் வகுத்த வான்மீகி என்பான், தீங்கவி செவிகளாரத் தேவரும் பருகச் செய்தான்' என்ற கவிக்

கூற்றே சான்றாகும். ராமாயண கதையில் மட்டு மல்ல, ராம பக்தியில் மட்டுமல்ல, வால்மீகி சுலோகங்களின் இசை வெள்ளத்திலும் கம்பன் முங்கி முழுகிக் களிப்புற்றிருக்க வேண்டும் என்பதற்கு மேலே காட்டிய கவிக் கூற்று ஆதாரம் தந்திருக்கிறது.

இந்த இளமை மோகம், இந்தக் கன்னிக் காதல், கம்பன் ராமாயணம் பாடியதற்கும் ஒரு காரணமாயிருக்கக் கூடும். தான் பாடிய ராமாயண கதையை இயன்றவரை வால்மீகத்தை ஒட்டி அமைத்திருப்பதற்கும் காரணமாயிருக்க வேண்டும்.

கதை யளவிலும் ஒட்டிப் பாடுவதுபோல் வெட்டிப் பாடுவதும் காணப்படுகிறதே யென்றால், இதுவும் கம்பனுடைய சொந்தக் கலா சிருஷ்டிக்கு ஒரு சான்றுதான்.



வெளிப் படையாகப் பார்ப்பவர்களுக்குக் கதை வால்மீகியின் 'உரையின்படி' நடப்பதாகவே தோன்றும். உற்றுப் பார்த்தால் கம்பனுடைய ஒவ்வொரு கட்டமும் ஒரு புதிய கலா சிருஷ்டிதான் என்று தெரியவரும். ஊடுருவிப் பார்க்கும் ரஸிகர்களுக்கு வால்மீகி சிருஷ்டி வேறு, கம்பன் சிருஷ்டி வேறு என்பது தெள்ளத் தேறித் தெரிந்து கொண்ட உண்மைதான்.

கட்டத்திலே கம்பன் மேதை

கம்பன் காவியத்திலே அமைந்திருக்கும் கவிச் சிற்பத் திறனையும் குணசித்திர வளர்ச்சிகளையும் உற்று நோக்குவதுடன், நாடகத் திறமையோடு அமைக்கப் பெற்றிருக்கும் ஒவ்வொரு கட்டத்தையும் உற்றுப் பார்க்க வேண்டும்; ஊடுருவிப் பார்த்தும் இந்தத் தனிப்பட்ட கலா சிருஷ்டியின் தன்மையையும் சிறப்பியல்புகளையும் கண்டு கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு காண்டத்திலும் கம்ப சித்திரங்களான கட்டங்களை அனுப வித்து வந்திருக்கிறோம். யுத்த காண்டத் திலும் கம்பனுக்கே உரிய கலைத்திறனைப் பலவேறு கட்டங்கள் வாயிலாகக் கண்டு கொள்கிறோம்.

கம்பனது காவியப்பூங் கோயிலுக்குக் கோபுரமாக அமைந்திருக்கும் யுத்த காண்டத்திலுள்ள கட்டங்களில் பொது வாகக் கம்பனது கற்பனைத் திறனின் முதிர்ச்சியைக் காணலாம் என்று சொல் லக் கூடும்.

பாலகாண்டத்தின் பல பகுதிகளிலும் சொல்லழகு, பொருளழகையும் மிஞ்சிப் போவது போலத் தோன்றுகிறது. அயோத்தியா காண்டம் தொடங்கிய துமே சொல்லழகை மிஞ்சவிடாது பொரு ளழகு போட்டி போடுவது போலக் காண்கிறது. யுத்த காண்டத்திலோ சொற்களைப் பின்னே திணற விட்டு 'உணர்ச்சிகள் முன்னே படுவேகமாய்ப் பந்தய ஓட்டம் ஓடுகின்றனவோ!' என்ற பிரமை ஏற்படுகிறது.

இத்தகைய கட்டங்களை முதன் முதல் நாம் மந்திரப் படலத்தில் கண்டோம். கோபுரத்தில் கொடி போலப் பறந்து கொண்டிருக்கும் 'இரணியன் வதைப் படல'த்திலும் கண்டு கொண்டோம்.

விபீஷணன் அடைக்கலப் படலத்திலே ராவணன் கோபித்து விபீஷணனைத் துரத்துவதும், விபீஷணன் நால்வருடன் வானர சேனை இருக்குமிடம் போய்ச் சரணாகதி செய்வதற்குமுன் மந்திரிமாரை வினவுவதும் எவ்வளவு வசீகரமான தோற்றுவாயாகின்றன! இந்த அடைக் கலக் கதைக்கிடையே ராமன் சீதையை நினைத்துப் பெருமூச்சு விடும் கட்டமும் அமைந்திருக்கிறது. பிறகு வானரர்கள் சந்தேகிப்பதும், அந்த ஆலோசனைக்கு முடிமணியாக அனுமன் பேச்சு அமைவ தும் எத்தகைய ரஸமான கட்டங்கள்!

ராமனை விபீஷணன் சந்திக்கும் கட்டம் எத்தகைய வசீகர சோபையுடன் திகழ் கின்றது! உடனே சரணாகதி; பிறகு அடி குடும் அரசை விரும்புகிறவனுக்கு முடி குடும் அரசும் வாய்க்கின்ற பேறு. கம்ப னது விபீஷண பட்டாபிஷேகமோ, சரணா கதர்களுக்கெல்லாம் சக்கரவர்த்தியாக அல்லவா இந்த அரக்கர் கோனை முடி சூட்டி வைத்திருக்கிறது!

மறுபடியும் சீதையின் நினைவு பொங்கி வருகிறது. இந்த ஒரு கட்டத்தைக் கொண்டு கம்பன் விபீஷண குணசித்தி ரத்தில் தனக்கு வேண்டிய ஒரு முக்கிய மாறுபாட்டைச் செய்திருப்பதும் நுணுகி நோக்குவோருக்கு இனிது புலனாகக் கூடியதுதான்.

அடுத்து வரும் இரண்டு படலங்களில் கம்பனது கவிதா தேவியும் கொஞ்சம் சோர்வுற்றுப் பெருமூச்சு விடுவது போலத் தோன்றுகிறது. ஆனால் இலங் கைப் பாசறையில் மீண்டும் கவிதா சந் நதம் வந்து தொடர்கிறது.

பாசறையைப் பாதுகாக்கும் தன் கடமையை மறந்து ராமன் பிரிவுத் துயரிலிருப்பதும், புதிய தம்பி விபீஷ ணன் அக்கடமையைத் தானே மேற் கொண்டு ஒற்றரைக் கண்டு காட்டுவதும், தவறான வழியில் சென்ற அந்த ஒற்றர் களின் புத்தி சாமர்த்தியத்தையும் வாக் குச் சாமர்த்தியத்தையும் ராமன் பயன் படுத்திக் கொள்ள நினைப்பதும் மறக்க முடியாத கம்ப சித்திரங்களல்லவா!

ஐந்து கவிகளில் ராமபிரான் அந்த ஒற்றர்கள் மூலமாக ராவணனுக்குச் செய்தி அனுப்பும் அந்தக் கட்டமே ஓர் அற்புதமான கம்ப சித்திரம் அல்லவா! இதே ஒற்றர்கள் ராவணனுடைய மந்தி ராலோசனை மன்றத்திலே தொண்டை யைக் கனைத்து இரத்தம் கக்கி வரும் காட்சிதான் எவ்வளவு கற்பனைத் திற னுடன் அமைக்கப் பெற்றிருக்கிறது!

மந்திராலோசனையில் தாய்ப் பாட்ட னை மாலியவானின் வாக்குச் சாதுரியத் துடன் எவ்வளவு ரஸமாகப் போட்டி போடுகிறது, ஒற்றர்கள் ராவணனிடம் ராமனைக் குறித்துச் செய்தி சொல்லும் பேச்சுத் திறன்!

இந்தக் கட்டங்களையெல்லாம் கூர்ந்து வாசித்து வந்தவர்கள் வால்மீகத்துடன் இவற்றை ஒப்பிட்டுப் பார்த்தால், 'அது ஒரு சித்திரம்; இது வேறொரு சித்திரம்; தழுவலும் அன்று, மொழி பெயர்ப்பு மன்று' என்பதை எளிதில் உணர்ந்து கொள்வார்கள்.

இத்தகைய கட்டங்களில் மிகச் சிறந்த வற்றை இனி மேல்தான் யுத்த காண் டத்தில் பார்க்கப் போகிறோம். தன்னை யும் கடந்து நீண்ட மேதாவிலாசத்தைக் கம்பன் இனிமேல் தான் வெளியிடப் போகிறான் இந்த யுத்த காண்டத்திலே.

கலா சிருஷ்டியிலே மொழி பெயர்ப்புத் திறனுக்கும் இடமில்லை; தழுவல்களுக்கும் இடமில்லையென்பது திண்ணம்.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

53. கதையமைப்பிலும் மாறுபாடுகள்

சேது கட்டி இலங்கைக்கு வந்து பாசறை அமைத்துக் கொண்ட பின்பே சுகசாரணர் வருவதாகக் கம்பன் கூறியிருக்க, வால்மீகத்தில் கடலின் இக்கரையிலேயே, ராமன் சமுத்திரராஜன் மீது அம்பு தொடுப்பதற்கு முன்பே, சுகனை நாம் சந்திக்கிறோம், சுகனது வருகைக்கு முன்பே வானர சேனையைச் சார்த்தூலன் என்ற வேறொரு ராட்சஸ ஒற்றனும் வந்து பார்த்துப் போய் ராவணனிடம் செய்தி சொல்வதாக ஆதி காவியம் தெரிவிக்கிறது.

வால்மீகரும் சுகனும்

சார்த்தூலன் மேல் நோக்காக அறிந்து வந்தது குறித்து மேலும் தெளிவாய், விவரமாக அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக வெகு சமர்த்தனான சுகனை அனுப்பி வைத்தான் ராவணன். இந்தச் சுகன் ஒற்றனாகப் போய் முதன் முதல் வானரரோடு வானரனாகக் கலந்து கொள்ளவில்லை.

சுக்கிரீவனிடம் தூது போக வேண்டுமென்றுதான் முதன் முதல் ராவணன் சொன்னான். ராமனை விட்டுச் சுக்கிரீவனை எப்படியாவது பிரித்துக் கிஷ்கிந்தைக்குத் திருப்பிவிட வேண்டுமென்பது ராவணன் எண்ணம்.

உடனே சுகன் ஒரு பறவை உருவில் பறந்து கடலைத் தாண்டிப் போனான். ராவணன் கட்டளைப்படியே தூது சொல்லத் தொடங்கியதும் வானர வீரர்கள் இந்தப் பறவையின் இறகுகளைப் பறித்து இந்த மாயப் பறவையையும் கொன்றுவிட வேண்டுமென்று கிளம்பி இச்சுகனை வான வீதியிலிருந்து வீழ்த்தி விட்டார்கள்.

'ஐயோ, தூதனைக் கொல்லுகிறீர்களே' என்று ராமனைக் கூவியழைத்துச் சுகன் முறையிட்டான். உடனே 'கொல்லாதேயுங்கள்' என்று ராமன் கட்டளையிட்டான்.

சிதைந்த சிறகுகளுடன் சுகன் மறுபடியும் ஆகாயத்தில் நின்றுகொண்டு சுக்கிரீவனை நோக்கி, 'உலகத்தைக் கதறப் பண்ணும் ராவணனிடம் நான் என்ன சொல்லட்டும்?' என்று கேட்டான். சுக்கிரீவனும் ராவணனுக்குச் செய்தி அனுப்பினான், — 'வாலியைப் போலவே ராவணா! நீயும் வதைக்கத் தகுந்தவன்' என்பதாக.

அப்போது வாலி புத்திரனான அங்கதன் சுக்கிரீவனை நோக்கி, 'மகாராஜாவே! இவன் தூதனல்லன்; ஒற்றன் என்றே நினைக்கிறேன்' என்றான். தூதனுக்குள்ள உரிமை வஞ்சகமாக வானர பலத்தை அறிந்து போக வந்திருக்கும் வேவுகாரனுக்குக் கிடையாதல்லவா! சுக்கிரீவன் ஆணையால் சுகன் மீண்டும் கட்டுப்பட்டான். ராமனே மறுபடியும் விடுவித்து விட்டான்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, சமுத்திர ராஜன்மேல் அம்பு தொடுப்பதும், அணை கட்டிக் கடந்து போவதும் நிகழ்கின்றன. ராமன் சேனையுடன் கடல் கடந்து வந்ததைச் சுகன் ராவணனிடம் தெரிவிக்கிறான். ராமன் இலங்கையை லட்சுமணனுக்குக் காட்டித் தன் படையின் அணிவகுப்புக் குறித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்தபின்பே சுகனை விட்டுவிடச் சொன்னதாக 24-ம் ஸர்க்கம் தெரிவிக்கிறது. இந்த விதமாக, முதன் முதல் 20-ம் ஸர்க்கத்தில் தோன்றிய சுகன் மீண்டும் தோன்றுகிறான்.

'இனி நீங்கள் செய்ய வேண்டியது இரண்டில் ஒன்று; சீதா தேவியை விரைவில் ஒப்புவித்து விட வேண்டும், அல்லது போர் தொடுக்க வேண்டும்' என்று சுகன் கூறி முடித்ததும் கண்ணால் சுட்டெரித்து விடுவதுபோல ராவணன் அவனை நோக்கித் தன் வெல்லற்கரிய வீரபராக்கிரமங்களை வற்புறுத்திப் பேசுகிறான்.

இருபதாம் ஸர்க்கம் சுகனை வெகு சமர்த்தனான ஓர் அரக்கன் என்று குறிப்பிடுகிறது. சார்த்தூலன் சொல்வதிலிருந்து சுகன் ஒரு வேவுகாரன் தான். வேவுகாரனையே ராவணன் தூதனாக அனுப்புகிறான். இந்த 'வெகு சமர்த்தன்' அவ்வளவு சாமர்த்தியமாக நடந்து கொள்ளவில்லை யென்றே இருபதாம் ஸர்க்கம் தெரிவிக்கிறது.

தூதனாகப் போய் மித்திர பேதம் செய்ய முயன்றதில் முற்றும் தோல்வியுற்ற சுகன், ராவணனுக்குச் செய்தி சொல்வதும் ராவணன் மறுமொழி சொல்வதும் 24-ம் ஸர்க்கத்தில் வருகின்றன. இங்கும் சமர்த்தனுடைய சமர்த்து ஒரு சிறிதும் வெளிப்படவில்லை.

வால்மீகியும் சுகசாரணரும்

25-ம் ஸர்க்கத்திலே மறுபடியும் ராவணன் சுகனைச் சாரணனோடு சேர்த்து அனுப்பிவைக்கிறான். இருவரும் ஒற்றராகத்தான் அனுப்பப் படுகிறார்கள். முந்திய ஸர்க்கத்தில் ராம பராக்கிரமத்தைத் துச்சமாகக் குறிப்பிட்டவன் இப்போது சுக சாரணர்களை அனுப்பும்போது ராம பராக்கிரமத்தை வியந்து பேசி, 'அந்த வானர சேனையின் அளவையும் பலத்தையும், முக்கியமானவர்களைப் பற்றிய செய்திகளையும்,ராமனுடைய மந்திரிகளைக் குறித்த செய்தி முதலான விவரங்களையும் .நீங்கள் போய் அறிந்துவாருங்கள்' என்கிறான்.

இப்போது தான் இவர்கள் வானர உருவங்கொண்டு வானர சேனையுடன் கலந்து விடுகிறார்கள், இப்போதுதான் விபீஷணன் இவர்களைப் பிடித்துக்கொண்டு 'இவர்கள் அரக்கர்கோனுடைய மந்திரிகளும் ஒற்றர்களுமாவர்' என்று ராமனிடம் காட்டுகிறான்.

இவர்கள் வாயிலாக ராமன் செய்தி யனுப்புவது வால்மீகியில் இந்த ஸர்க்கத்தில் வரத்தான் செய்கிறது. ஆனால் ஐந்து பாடல்களிலிருந்து ஏழு பாணங்கள் போல் வெளிப்படுகின்ற அந்தச் செய்திக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.



26-ம் ஸர்க்கத்தில் சாரணன் வருகிறான். இவன் தான் வானரசேனையை ராவணனுக்குக் காட்டுகிறான். முக்கியமான வானரத் தலைவர்களை இவன் சுட்டிக் காட்டுவது 27-ம் ஸர்க்கத்திலும் வருகிறது.

சுகனும் ராமன் படையிலுள்ள தலைவர்களை ராவணனுக்குத் தெரிவிப்பதாக 28-ம் சர்க்கம் தெரிவிக்கிறது. இந்தச் சர்க்கத்தில் சுகன். அனுமன் சுக்கிரீவன் முதலானவர்களோடு ராமலட்சுமணரையும் விபீஷணனையும் சுட்டிக் காட்டுகிறான்.

'ராமனுடைய இடது பக்கத்தில் விளங்குகிறாரே, அவர்தான் விபீஷணர்; தங்களுடைய இராஜ்யத்திற்கு மன்னர்!' என்று நகைச்சுவையுடன் இந்த ஒற்றன் கூறுகிறான். 'அரசர்க்கு அரசனாகிய ராமனால் இலங்கைக்கு அரசாக முடி சூட்டப்பெற்றார்!' என்றும் சுகன் சொல்வது ரஸமாகவேயிருக்கிறது.



சார்த்தூலன் முதலானவர்கள்

சுக சாரணர் மீது ராவணனுக்குக் கோபம் பொங்குகிறது. அவன் அவர்களைக் கடிந்துரைப்பதும், சார்த்தூலன் முதலான வேறு ஒற்றர்களை வரவழைத்து 'நீங்கள் போய் ராமனுடைய பலத்தைச் சோதித்துப் பாருங்கள்; இரகசியங்களை ஒன்று விடாமல் அறிந்து வாருங்கள்' என்று அனுப்பி வைப்பதும் 29-ம் ஸர்க்கத்தில் சொல்லப்படுகின்றன.

இந்த ஒற்றர்களும் மாறுவேடத்தில் போகிறார்கள். இவர்களையும் விபீஷணன் பற்றிக் கொள்கிறான்: ராமன் விடுவிக்கிறான், இவர்களும் இலங்கை சென்று செய்தி சொல்லுகிறார்கள்.

மாயா ராமன்

சார்த்தூலன் ராமசேனையை ராவணனிடம் கூறுவது 30-ம் ஸர்க்கத்தில் சொல்லப்படுகிறது. சார்த்தூலன் சுகசாரணர்களுக்கும் முன்பே வானரசேனையைக் கண்டு வந்தவன் தான். அந்தக் கரையிலேயே கண்டு வந்தவன் தான். இவன் 30-ம் ஸர்க்கத்தில் ஒற்றர்களில் உத்தமன் என்று குறிக்கப் பெறுகின்றான்.

31-ம் ஸர்க்கத்தில் ராவணன் மந்திராலோசனை செய்துவிட்டு வித்யுஜ்ஜிஹ்வன் என்ற ஓர் அரக்கனை வரவழைத்து மாயை செய்து ஜானகியை மயங்கச் செய்ய வேண்டுமென்று கட்டளை

விடுகிறான். அந்தக் கட்டளைக் கிணங்க ராமனுடைய தலை போன்ற ஒரு தலையையும், அம்போடு கூடிய ஒரு பெரிய வில்லையும் மாயையால் நிருமித்துச் சீதையிடம் காட்ட வேண்டியது இந்த அரக்கன் கடமையாகிறது.

ராவணன் சீதையிருக்குமிடம் போய், 'உன் கணவனுகிய ராமன் போரில் கொல்லப்பட்டான்' என்று செய்தி சொல்லுகிறான். இந்தக் கொலை விவரங்களையும் கற்பனை செய்து பேசுகிறான். ராமன் தூங்கிக் கொண்டிருந்த சமயத்தில் பிரகஸ்தன் அவன் தலையை வெட்டி விட்டதாகச் சொல்லுகிறான்.

அதேசமயம் வித்யுஜ்ஜிஹ்வன் தலையையும் வில்லையும் ராவணன் முன்பு கொண்டு வருகிறான். அத்தலையைக் கொண்டு வந்து சீதா பிராட்டியின் முன்பு வைத்து விட்டுப் போய் விடுகிறான்.

32-வது ஸர்க்கத்தில் சீதையின் பிரலாபம் வருகிறது. ராவணன் அசோக வனத்திலிருந்து திரும்பிப் போய் மந்திராலோசனை செய்வதும் பிரஸ்தாபிக்கப் படுகிறது.

விபீஷணன் மனைவி

அடுத்த ஸர்க்கத்தில், விபீஷணன் மனைவியாகிய ஸரமை சீதையைத் தேற்றுகிறாள். இவளை ஓர் அன்புத் தோழி என்று வால்மீகி குறிப்பிடுகிறார். ராவண சைனியங்கள் போருக்குச் சித்தமாகின்றன. இந்த யுத்த ஸந்நாகத்தைக் காட்டியும் சீதையைத் தேற்றுகிறாள் ஸரமை.

34-ம் ஸர்க்கத்திலும் ஸரமை ராவண சபைக்குப் போய் அங்கு நடந்த விஷயங்களை அறிந்து சீதைக்குத் தெரிவிக்கிறாள். இதே சமயம் வானரர்களின் முழக்கம் கேட்கிறது.

வேறு செய்திகள்

35-ம் ஸர்க்கத்தில் மாலியவான் ராவணனுக்குப் புத்தி சொல்லுகிறான். அடுத்த ஸர்க்கத்தில் ராவணன் தாய்ப் பாட்டனைக்கடிந்து பேசிவிட்டு இலங்கையைப் பாதுகாக்குமாறு தன் சேனையை வகுத்து வைக்கிறான்.

ராமன் இலங்கையில் போரிடுவதற்குச் செய்த ஏற்பாடுகள் 37-ம் ஸர்க்கத்தில் பிரஸ்தாபிக்கப் படுகின்றன. அடுத்த ஸர்க்கத்தில் ராமன் இலங்கையைப் பார்க்குமாறு சுவேல மலையில் ஏறுகிறான். இலங்கையைக் காண்பது 39-ம் ஸர்க்கத்தில் வருகிறது.

அடுத்த ஸர்க்கம் ராவணனுக்கும் சுக்கிரீவனுக்கும் நடந்த தொந்த யுத்தத்தை வருணிக்கிறது. ராமன் லங்கையை முற்றுகை செய்து அங்கதனை அனுப்புவது அடுத்த ஸர்க்கம்.

42-ம் ஸர்க்கத்திலே வானரர்கள் அரக்கர்களுடன் போர் புரியத் தொடங்குகிறார்கள். அடுத்த இரண்டு ஸர்க்கங்களிலும் போர் தொடர்ந்து நடக்கிறது.

45-ம் ஸர்க்கத்திலே நாகபாசத்தால் இந்திரஜித் ராம லட்சுமணர்களைக் கட்டி விடுகிறான். இப்படிப் போகிறது வால்மீகியின் யுத்த காண்டக் கதைப் போக்கு.

கம்பனது மாறுபாடுகள்

இந்தக் கதைப் போக்கிலே கம்பன் எத்தனை வேறுபாடுகளும் மாறுபாடுகளும் செய்து கொண்டிருக்கிறான் என்பதை ஸ்தூலமாக நோக்குவோரும், கம்பனது கலாசிருஷ்டியில் தழுவலுக்கோ மொழிபெயர்ப்பிற்கோ இடமில்லை யென்பதைக் கண்டுகொள்வர்.

ஒற்றர் கதைகளிலே சுக சாரணர் கதையை மட்டும் சுருக்கி அமைத்திருக்கும் முறையே கம்பனுடைய கலைத் திறனுக்கு ஒரு நல்ல சான்று. அடுத்த படலத்திலே ராமன் சுவேல மலை மீது ஏறி இலங்கையைக் காண்கிறான்; லட்சுமணனுக்குக் காட்டுகிறான்.

இதற்கு அடுத்த படலத்திலே ராவணன் வானர சேனையைக் காண்கிறான். இதை யடுத்து நிகழ்கிறது சுக்கிரீவ ராவணர்களின் தொந்த யுத்தம். பிறகு ராமனும் ராவணனும் சேனைகளை அணியாக வகுத்தது கூறப்படுகிறது. அப்பால் அங்கதன் தூது.

இந்தத் தூது நிகழ்ச்சிக்குப் பின் ராவணனே ராமனோடு போர் புரிய வந்து விடுகிறான்; இம் முதற் போரில் தோற்றுப் போகிறான். பிறகு கும்பகர்ண வதை முதலான நிகழ்ச்சிகள். அதிகாயனும் வதமான பின்பு இந்திரஜித் வருகிறான்: நாகபாசம் வீசுகிறான்.

இப்படிக் கதையமைப்பு முறையிலே கம்பன் மாறுபாடுகள் செய்து கொண்டு தனக்கே உரிய கலைத் திறனுடனும் நாடகப் பண்புடனும் காவியச் சிற்பத் திறனுடனும் யுத்த காண்டத்தை விண்ணில் முடிதாக்கும் ஒரு பெருங் கோபுரமாகக் கட்டி நிறுத்துகிறான். இவற்றையெல்லாம் நாம் படிப்படியாக ஆராய்வோம்.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

54. காளமேகமும் நாணொலியும்

ராமன் சேனையுடன் கடல் கடந்து வந்த பின், சுகன் ராவணனுக்குச் செய்தி சொல்வதற்கு முன், வால்மீகத்திலே 24-ம் ஸர்க்கத்திலேயே ராமன் இலங்கையைக் காண்பதும் லட்சுமணனுக்குக் காட்டுவதும் சுருக்கமாகச் சொல்லப்படுகின்றன. கம்ப ராமாயணத்திலோ, 'இலங்கை காண் படலம்' விரிவாகப் பாடப் பெற்றிருக்கிறது.

சாதாரண விவரங்களில் ஒற்றுமை

'அழகான கொடிகளும் தோரணங்களும் பறந்து கொண்டிருக்கும் இலங்கையை ராமன் தன் கண்களால் பார்த்ததும்' என்று சொல்லுகிற வால்மீகி, உடனே ராமன் கண்ட இலங்கையை வருணிக்கத் தொடங்கிவிடாமல், சிறைப்பட்டிருந்த தேவியை நினைத்துக்கொண்டு வெப்பமாகப் பெருமூச்சு விடுவதாய்க் கூறுகிறார். கம்பனும் லங்கா நகரத்தை முதன் முதல் பார்க்கிற ராமனைப் பிரிவுத் துயருடனேயே தோற்றுவிக்கிறான்.

'இங்கே தான் மான்குட்டியின் கண்களையுடைய என் தேவியாகிய சீதை சிறை வைக்கப் பட்டிருக்கிறாள்' என்று ராமன் பிரிவுப் பிணியால் வருந்திக் கொண்டிருந்த தன் உள்ளத்திலே சீதையின் கண்ணழகை நினைவூட்டிக் கொள்வதாக வால்மீகி கூறியுள்ளார். இந்தக் கண்ணழகு வருணனையையும் கம்பன் மறந்துவிட வில்லை.

மலை மீது ஏறிய ராமன் இலங்கையை முதன் முதல் காணும் நிலை இது :

பிணை நெடுங் கண்ணி
என்னும் இன்னுயிர்
பிரிந்த பின்னை,
துணைபிரிந்(து) அயரும்
அன்றிற் சேவலின்
துளங்கு கின்றான்,
இணை நெடுங் கமலக்
கண்ணால் இலங்கையை
எய்தக் கண்டான்.

[பிணை நெடுங்கண்ணி – பெண்மானைப் போன்ற நீண்ட கண்களை யுடையவள். பிரிந்த பின்னை – பிரிந்த பிறகு. துணை பிரிந்து – தன் துணைவியாகிய பேடையைப் பிரிந்து. அயரும் – வருந்துகின்ற. அன்றிற் சேவலின் – ஆண் அன்றிற் பறவைபோல. துளங்குகின்றான் – வருந்துபவனாகி. இணை நெடுங் கமலக் கண்ணால் – நீண்ட இரண்டு தாமரைக்கண்களாலும். எய்தக் கண்டான் – நன்றாகக் கண்டான்.]

'தழுவல் என்று சொல்வதைக் காட்டிலும் மொழிபெயர்ப்பு என்றே சொல்லி விடலாமோ?' என்று கருதத் தக்க நிலையில் ராமனது இலங்கைக் காட்சி ஆரம்பமாகிறது. ஆனால் இப்படி ஆரம்பித்துத் தனக்கே உரிய பொருள் பொதிந்த விவரங்களுடனும் சிறப்பியல்புகளுடனும் ஒரு தனிப் பெருஞ் சித்திரம் அமைத்துக் காட்டுகிறது கம்பனது மேதை.

தான் கண்ட இலங்கையை ராமன் லட்சுமணனுக்குக் காட்டுவதாக வால்மீகி கூறுகிறார். கம்பனும் அப்படியேதான் சொல்லுகிறான். ஆனால் ராமன் லட்சுமணனுக்குக் காட்டும் இலங்கை இரு பெருங் காவியங்களிலும் இரண்டு வேறுபட்ட சித்திரங்களாய்க் காண்கிறது.

வால்மீகத்திலே காண்பது

'லட்சுமணா, விசுவகர்மா தன் மனத்தால் நிர்மாணம் செய்தது போலத் தோன்றுகிற இந்த இலங்கை வானத்தையே முட்டக் கிளம்பியிருப்பது போல விளங்குகிறது. அதோ பார்; பல மாளிகைகளால் இலங்கை நிரம்பி விளங்குவதைப் பார்த்தால் சூரியன் சஞ்சரிக்கும்

வானமே பல வெண் மேகங்களால் மூடப்பட்டிருப்பது போலத் தோன்றுகிறது. பல பறவைகள் ஒலிக்க, மல்லிகை முதலிய பூங்கொடிகள் நிரம்பிப் பூத்து விளங்கும் தோட்டங்கள் பல இந்நகரை அழகு செய்கின்றன. இதோ பார்; கொழுத்துத் திரியும் பறவைகளையும், பூக்களில் பதுங்கிக் கிடக்கும் வண்டுகளையும், குயில்கள் அமர்ந்திருக்கும் தளிர்த் தொகுதிகளையும் உடைய தோட்டங்களை இளங்காற்று அசைத்துக் கொண்டேயிருக்கிறது.' — இவ்வளவு தான் வால்மீகத்திலே ராமன் கண்டு காட்டும் இலங்கைச் சிறப்பு.

அதே மூச்சில் அணிவகுப்பைப் பற்றிக் கட்டளையிடத் தொடங்கி விடுகிறான் ராமன். வானரர்களும் இலங்கை யழகை அனுபவிப்பதைக் காட்டிலும் 'இலங்கையை முற்றிலும் அழித்துவிட விரும்பியவர்களாய் வந்து நின்றார்கள்' என்பதும், 'இவ் விலங்கையைப் பொடியாக்கி விட வேண்டுமென்று அவ்வானரர்களில் ஒவ்வொரு வீரனும் கருதினான்' என்பதும் வால்மீகி பகவானின் வாசகம்.

கம்ப சித்திரத்திலே காண்பது

கம்பன் காவியத்தில் ராமன் இலங்கைச் சிறப்பைக் கண்டு லட்சுமணனுக்கு அறிவிப்பது பதினேழு கவிகளில் வருணிக்கப் படுகிறது. 'அழகிய நகரங்களுக்கு உவமையாக இந்திரனுடைய அமராவதி நகரத்தைக் கூறும் புலவர்கள் இலங்கையையல்லவா எடுத்துக் காட்ட வேண்டும்!' என்று தொடங்கும் ராமன், அதிசயத்திற்கு மேல் அதிசயமாக இலங்கையின் அழகுகளை லட்சுமணனுக்குக் காட்டிக் கொண்டே வருகிறான். 'பொய்த்திரு' வாக இருந்த போதிலும் வனப்பிற்கும் வளத்திற்கும் குறைவில்லையே!

இந்த இலங்கை வருணனைப் பகுதியைக் கம்பனது சித்திரசாலையை அழகு செய்யும் சித்திரங்களில் ஒன்றாகக் கருதலாம். இதைக் கூர்ந்து நோக்குவதற்கு முன் இதற்குப் பீடிகையாக வருகின்ற சில பாடல்களை முதன் முதல் நோக்குவோம்.

வெள்ளம் கோத்துக் கிடந்தாற் போன்ற இருள் போய்ப் பொழுது விடிகிறது:

வெள்ள நீர் வடிந்த
தென்ன, விங்கிருள்
விடிந்த தன்றே!

[வீங்கு இருள் – மிக்க இருள்.]

சூரியோதயமாகிறது. சூரியனும் ராமனோடு இலங்கையைப் பார்க்க வருவது போலக் கவிஞன் வருணிக்கிறான். 'நேற்று வரை எட்டிப் பார்க்கவும் அஞ்சியிருந்தவன்' அல்லவா!

இப்பொழுதோ போரை மேற்கொண்டு வந்துவிட்டான் ராமன். ராமனோடு தானும் பார்த்துத் தீர்த்து விடுவது என்று துணிந்து வருகிறானாம் சூரியன்:

'மன்னவர்க்(கு) அரசன்
வந்தான் வலியமால்'
என்று தானும்

தொன்னகர் காண்பான்
போலக் கதிரவன்
தோற்றம் செய்தான்.

சூரியோதயமானதும் பரிவாரங்களுடன் ராமன் சுவேலமலையின் உச்சியில் ஏறுகிறான்:

செருமலி வீரர்
எல்லாம் சேர்ந்தனர்
மருங்கு செல்ல,

இருதிறல் வேந்தர்
தாங்கும் இணைநெடுங்
கமலக் கையான்,

பொருவலி வயவெஞ்
சியம் யானையும்
புலியும் சுற்ற

அருவரை இவர்வ
தாங்கோர் அரியர(சு)
அனையன் ஆனான்,

[செரு மலி வீரர்-போரில் மிக்க வீரர். சேர்ந்தனர் – ஒன்று சேர்ந்து. மருங்கு – பக்கங்களில். இரு திறல் வேந்தர் – வலிமை பொருந்திய இரண்டு அரசர்கள்; அதாவது, வானர மகாராஜாவான சுக்கிரீவனும் ராட்சஸ மகாராஜாவான விபீஷணனும். தாங்கும் – கைவாகு கொடுத்துத் தாங்குகிற. இணை நெடுங்கமலக் கையான் – தாமரை போன்ற இரண்டு நீண்ட கைகளையுடைய ராமன். பொரு வலி வய வெஞ்சியம் – போர் செய்யும் வலிமையும் வெற்றியும் உடைய கொடிய சிங்கங்கள். அருவரை – ஏறுதற்கு அரிய மலையில். இவர்வது ஆங்கு ஓர் அரிஅரசு – ஏறுவதாகிய ஒப்பற்ற அரசச் சிங்கம். அனையன் ஆனான் – ஒத்தவன் ஆனான்.]

சிங்கம் போலவும் யானை போலவும் புலி போலவும் பல திறப்பட்ட வலிமை



வாய்ந்த வானர வீரர்களைக் காட்டி, அவர்களுக் கிடையே ராமனைக் காட்டுகிறான் கவிஞன். காட்டிவிட்டு, 'சுவேலமலைச் சிகரத்தில் அழகே உதயமானது போல'த் தோன்றும் ராமனைத் தனியாகவும் காட்டுகிறான்.

'தோள் கண்டார் தோளே கண்டார்!' என்பது போல அனுபவிக்க வேண்டிய திருமேனியின் சோபையை நோக்கும் போது மற்றவர்களை யெல்லாம் மறந்து விடுவது எளிது தானே!

நிர்மல வசீகர அழகு

அந்த உதய அழகு இக்கணத்தில் சூரியனைப் போலவோ, சந்திரனைப் போலவோ ஒளிரவில்லை. வானவில்லோடு கூடிய நீலமேகம் ஒன்று மலைச் சிகரம் வந்தணைந்தது போன்ற வசீகரமான தோற்றம் இப்போது நாம் காண்பது.

'கருமுகில் தாமரைக்காடு பூத்து' என்று அவதாரி (அவதாரம் செய்யப் போகும் திருமால்) வருணிக்கப்படுகிறான், இப்போது அதே மாதிரியான திவ்ய வசீகர அழகு சுவேல மலை உச்சியை அணி செய்து நிற்கிறது.

இலங்கையை முதன்முதல் நோக்கி நிற்கும் வீரசௌந்தரிய வசீகர நிலை இது:

துமிலத்தின் செருவின்
வாளிப் பெருமழை
சொரியத் தோன்றும்

விமலத்தின் சிலையின்
ஆண்(டு)ஓர் வெற்பினை
மேய வீரன்,

அமலத்தின் கரமும்
காலும் வதனமும்
கண்ணும் ஆன

கமலத்தின் காடு
பூத்த காளமா–
மேகம் ஒத்தான்.

[துமிலத் தின் செருவின் – நெருங்கிச் செய்யும் வலிய போரில். வாளி – அம்பு.

விமலத் திண் சிலையன் – குற்றமற்ற வலிய வில்லையுடைய வனுசி. ஆண்டு – அங்கே. ஓர் வெற்பினை மேய – ஒரு மலையைப் பொருந்திய. அமலத் திண் கரமும்–குற்ற மற்ற வலிய கையும்.]

ராமன் முதன் முதல் காட்சி வழங்கும் போது அந்தத் திருவுருப் பொலியும் ஒரு வசிகரமான சித்திரத்தைப் பெரும்பாலும் எதிர் பார்க்கலாம். இங்கே சுவேலமலைபி விருந்து காட்சி வழங்கும்போதும் அத் தகைய சித்திரம் ஒன்று மேலே சொன்ன பாட்டில் காணப்படுகிறதல்லவா !

அமலத்திண் கரமும்
காலும் வதனமும்
கண்ணும் ஆன

கமலத்தின் காடு
பூத்த காளமா
மேகம் ஒத்தான்

என்ற சொல்லோவியத்திலே, 'ஓவியத்து எழுதவொண்ணு உருவம்' செவியாலும் கண்ணாலும் நெஞ்சாலும் அனுபவிக்கு மாறு பிரதிபலிக்கிறதல்லவா !

'அமலன், விமலன், நிமிலன், நிர்மலன்' என்றெல்லாம் திருப்பாணுழ்வார் ஈடு பட்டு அனுபவிக்கும் அந்தத் தூய சௌந் தரியத்தைக் கம்பனும் அந்த ஆழ்வார் வாயிலாக அனுபவித்திருக்க வேண்டும்; அந்தப் பாண்பெருமாளின் அதே நிலைபி லிருந்து அனுபவித்திருக்கவும் கூடும்.

இப்படி ஏகாந்தமாக ராமதரிசனம் செய்த பின்பு மறுபடியும் அந்த வீர கோஷ்டியுடன் சேவிக்க ஆசைப் படுகி றது கவியுள்ளம். வாசகர்களின் சௌந் தரிய தாகத்துக்காகவும் இந்தக் 'காள மாமேகம்' வீரர் திருக்கூட்டத்தின் நடு விலே காட்சி தருகின்றது.

'பருவக் கருமுகில் ஒத்து, முத்துடை மாகடல் ஒத்து.—அருவித்திரள் திகழ் கின்ற ஆயிரம் பொன்மலை ஒத்து' என்று திருமங்கையாழ்வார் அனுபவித்த அதே திவ்ய சௌந்தரியம், இப்போது பரி வாரங்களினிடையே,

பொற்குவட் டிடையே
தோன்றும் மரகதக்
குன்றம் போன்ருன்

என்றவாறு காட்சியளிக்கிறது.

ஆழ்வாரின் 'பருவக் கருமுகில்' தான் இங்கே 'காளமேகம்'. அங்கே 'ஆயிரம் பொன்மலை ஒத்'தவன் இங்கே பொன் மலைகளினிடையே மரகதமலை ஒத்துக் காட்சியளிக்கிருன்.

இப்படி ராம சௌந்தரியத்தைப் புலப்படுத்தும் பாட்டு முழுமையும் கூர்ந்து நோக்கத் தக்கது :

மற்குவ டனைய
திண்டோள் மானவன்,
வானத் தோங்கும்

கற்குவ(டு) அடுக்கி
வாரிக் கடலினைக்
கடந்த காட்சி

நற்குவ டனைய
வீரர் ஈட்டத்தின்
நடுவண் நின்ருன்,

பொற்குவட் டிடையே
தோன்றும் மரகதக்
குன்றும் ஒத்தான்.

[மற்குவடு அனைய – வலிமை பொருந் திய மலைச்சிகரம் ஒத்த. திண் தோள் – வலிய தோள்கள். மானவன் – மனு குலத்தில் வந்த ராமன். கற்குவடு - கல் மலைகள். வாரிக் கடல் – நீர்க்கடல். கடந்த – கடந்தவர்களும். காட்சி நற் குவடு அனைய – காட்சிக்கு இனிய அழ கிய மலையை ஒத்தவருமான. ஈட்டத்தின் நடுவண் – கூட்டத்தினிடையே. பொற் குவட்டிடையே – பொன் மலைகளினி டையே.]

'மற்குவடு அனைய திண்டோள்' என் பது, 'மல்லாண்ட திண்டோள்' என்ற பெரியாழ்வாரின் சொற்றொடரை நினை வூட்டுகிறது. அந்த 'மல்லாண்ட திண் டோள் மணிவண்ணனன்' தான் இப்போது மரகதக் குன்றமாகக் காட்சி வழங்கு கிருன். 'குன்றாடு கொழுமுகில் போல்' என்று அப் பெரியார் கூறுவது 'காள மேகம் ஒத்தான்' என்ற கம்பன் வாக் கிலே பிரதிபலிக்கக் காண்கிறோம்.

பாணங்களால் 'பெருமழை சொரியத் தோன்றும் விமலத்திண் சிலையன்' வான வில்லோடு கூடிய காளமேகம் ஒத்துத் தோன்றி விடுகிருன்.

அந்த வில்நாண் ஒலியைக் கேட்பது போல் ஒரு பிரமை ஏற்படுகிறது, 'நின் ருன்' என்றும், 'தோன்றும் மரகதக் குன்றம் போன்ருன்' என்றும் வருகின்ற சப்த ஜாலங்களிலே.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

55. திருமதி இலங்கா சுந்தரி

இக்காலத் தொழில் – வாணிப – யந்திர நாகரிக வளர்ச்சியால் வளர்ந்தோங்கும் நகரங்களெல்லாம் பெரும்பாலும் ஒரே தொழிற்சாலையில் உருவாக்கப்பெற்றவை போலக் காண்கின்றன. ஒரு நகரம் ஏதாவதொரு தனிப் பெரும் பண்பையோ, சிறப்பையோ வெளியிடுவதாகத் தோன்றவில்லை.

'இரண்டு மனித முகங்கள் தம்முள் ஒத்திருப்பன அல்ல' என்று சொல்லுகிறோமே, அந்த நியதி இன்றைய மனிதர்கள் அமைத்துக் கொள்ளும் நகரங்களின் முகப் பொலிவிற்குப் பொருந்துவன அல்ல.

முகமூடி நாகரிகமா?

கவி ரவீந்திரநாதரோ, 'தற்கால நகரங்களின் முகத்தைத்தான் உள்ளபடி பார்க்க முடிகிறதா!' என்று கேட்கிறார். 'முகத்தின் லட்சணம் தெரிவதில்லையே! நாம் முகமூடியைத் தானே பார்க்கிறோம்!' என்கிறார் வங்கக் கவிஞர் பெருமான்.

மேலும் கூறுகிறார்: 'சில நகரங்கள் முகமூடியை மெருகிட்டுப் பள பளப்பாக வைத்துக் கொண்டிருக்கின்றன. (ஐரோப்பிய அமெரிக்க நகரங்களைக் குறிப்பிடுவதாகக் கருதலாம்.) வேறு நகரங்கள் முகமூடியின் அழுக்கையும் போக்கிக் கொள்ளாமல் இருக்கின்றன. (நமது இந்திய நகரங்களுக்கு எவ்வளவு பொருத்தமான வருணனை இது!')

'அசடு வழியும் முகத்திற்கு அழுக்கு வழியும் முகமூடி போதாதா!' என்பது போலத் தோற்றம் அளிக்கின்றன, யந்திர நாகரிகத் துறையில் இன்னும் முன்னேறாத நமது நகரங்கள்.

மூன்று நகரங்கள்

ராமாயணத்தில் மூன்று நாகரிக நகரங்கள் பிரஸ்தாபிக்கப் படுகின்றன. (கிஷ்கிந்தாபுரி இந்த நாகரிகக் கணக்கில் சேர்க்கப் படவில்லை.) இவை அயோத்தி, மிதிலை, இலங்கை.

கம்ப ராமாயணத்திலே இந்த நகரங்களின் முகங்களைப் பார்க்கிறோம். அகத்தோடு முகத்தின் லட்சணத்தையும் பார்க்கிறோம் என்றே சொல்லலாம்.

'ஒரு முகம் போல் மற்றொரு முகம் இருப்பதில்லை' என்ற உண்மை கம்பனுடைய மூன்று நகரங்கள் விஷயத்திலும் உண்மைதான். தமிழ்ப் பெண்களைப் போல் கம்பனுடைய நகரங்களும் முகமூடி அணிவதில்லை என்பதை இங்கே குறிப்பிடலாம்.

கம்பன் கண்ட அயோத்தி கல்வி என்ற ஒரு வித்திலிருந்து முளைத்த கற்பகம்; தருவின் கொம்பிலே கனிந்த நல்லின்பப் பெருவாழ்வு. அயோத்தி அறிவுப் பெருங் கோயில்; எனவே உறுதியான அடிப்படையில் நிற்கும் அறப்பெருங் கோயில். 'மெய்த்திரு!' களிநடம் புரியும் மேடை. மண்ணுலகிற்கு இறங்கி வந்த விண்ணுலகு!

மிதிலை காதலின் கற்பகச் சோலை; காதலின் 'அணுச் சக்தி'யால் மலையும் சிலையும் மாலையாகி விடும்! கல்வியால் வெற்றி காண்பவள் ஸ்ரீமதி அயோத்தியென்றால், தூய காதல் என்ற சக்தியால் வெற்றி காண்பவள் மிதிலைச் செல்வி. இவளுக்கு இன்பப் பெருவாழ்வும் காதல் வாழ்வுதான்; சக்திப் பெருவாழ்வும் காதல் வாழ்வுதான்.

லங்கா சுந்தரிக்கோ போகமே பேரின்பம். உடலுறவாகிய காமமே காதல்–தெய்வம். பொருளே–பொய்த்திருவே–பரம்பொருள். பழைய மும்மூர்த்திகளை மகுடபங்கம் செய்து விட்டுப் பொருள், போகம், வேகம் என்னும் மும்மைப் பெருந் தெய்வங்களுக்கு அடிமையாகி அந்த அடிமைத் திறத்தையே திறமையென்றும் வாழ்வென்றும் மயங்குகிறவள் திருமதி இலங்கை.

லங்கா சுந்தரிதான் சுந்தர காண்டத்தில் லங்கிணியாக, நாலு முக



மும் எட்டுத் தோளுமாய் ராட்சஸ ஏகாதிபத்திய ஆட்சிக்கும் மாட்சிக்கும் ஓர் உருவமாக வந்து அனுமனை அதட்டினாள், மிரட்டினாள்.

ஆயுதங்களைப் போல் அலங்காரங்களுக்கும் குறைவில்லை. ஆனால் மகுடம், மகுட மாலை, இவள் பூசியிருக்கும் இரத்த வர்ணமான செஞ்சந்தனம், மின் வெட்டும் இரத்தின நகைகள் (ஏழை மனிதர்களின் இரத்தமே அரக்கர் இரத்தினம்!), பயமுறுத்தும் பாத சர ஓசைகள் ஆகிய அலங்காரங்களெல்லாம் இவளுடைய அலங்கோலத்தை எடுத்துக் காட்டுகின்றன. அனுமன் சாவகாசமாய்க் கண்ட லங்கா சுந்தரியின் ஒரு ரூப விசித்திரம் லங்கிணி.

ராமனும் சுவேலமலை உச்சியிலிருந்து இளஞ் சூரியனது பொன்னிறக் கதிர்களில் குளித்துக் களிக்கும் லங்கா சுந்தரியையும் இவளுடைய அலங்காரங்களையும் காண்கிறான். அலங்கோலத்தை உய்த்துணர்ந்து கொள்கிறான்.

உடற்கோணல் இல்லையென்பது மட்டுமல்ல; ஆடையாபரண நாகரிகத்தின் உச்சநிலையில் இருக்கிறாளென்பது மட்டுமல்ல; மேனிப்பொலிவிற்கும் மேனி ஒளிக்கும் அளவேயில்லை. நகத்திலும் அழுக்கேறாத அழகிற்கு என்ன குறைவு!

இன்றும் அன்றும்

படேவியா நகரத்தைக் குறித்து ரவீந்திர நாத தாகுர் கூறியுள்ளார்; 'ஸ்ரீமதி படேவியாவுக்கு உச்சந் தலை முதல் உள்ளங்கால் வரை அலங்காரங்களுக்குக் குறைவில்லை. சோப்புத் தேய்த்து வாசனை பூசி அபிவிருத்தி செய்து கொண்ட மேனிப் பொலிவிற்குத் தான் என்ன குறை?'

மேனிப் பொலிவையும் அறியாத நகரங்களை நாம் அறிந்திருக்கி

றோம், இன்றைய சுதந்திர இந்தியாவி லும். 'சோப்பு-டேப்பு-சீப்பு' நாகரிகம் வந்து விட்டது என்பது உண்மைதான்; எனினும் ஸ்தூலமான சுத்தத்தைத் தான், பொலிவைத் தான் நாம் திடமாகக் கற்றுக்கொண்டு விட்டோமா ?

தமது கல்கத்தா நகரத்தைக் குறித்து ரவீந்திரநாதர் சொன்னார்; 'நம் கல்கத் தாவோ சுமங்கலி என்பதற்கு அடை யாளமாகக் கையில் இரும்பினால் வளை செய்து போட்டுக் கொண்டிருக்கிறாள்; பொன் வளையோ, இரத்தின மாலையோ அணிந்திருக்கவில்லை. (யந்திர நாக ரிகத்தால் மேற்கேயுள்ள நகரங்கள் இரத்தத்தை இரத்தினமாக்கும் வித்தை யைக் கற்றிருக்கின்றனவே, அந்த வித்தை யும் இல்லாமல் வறுமையில் கல்கத்தா மூழ்கி கிடக்கிறதென்பது குறிப்பு.) இவள் எந்த நீரில் குளிக்கிறாளோ, அந்தச் சேற்றின் அழுக்கு ஏறி இவள் மேனி தடைக்கும் வஸ்திரத் துண்டு கூட மாசடைந்திருக்கிறது!'

'நான் இந்தச் சேற்றில் உறைபவள் அல்லவா!' என்று காட்டிக் கொள் கிறாளாம் ஸ்ரீமதி கல்கத்தா.

திருமதி சென்னையோ சுமங்கலி என்ற அடையாளமாக — தன் ஏழைமைக்கு அடையாளமாகவும் தான்—கரும்பாசி மணி மாலை அணிந்திருக்கிறாள்; கரிய, அழுக்கேறியதும் தெரியாத, துணி கட்டி யிருக்கிறாள். மின்னுவதெல்லாம் பொன் இவளுக்கு!

இவளுடைய அரசியலிலும் பிற விவ காரங்களிலும் 'கூவம்' நதியின் வாசனை யும், சேறும் கூடக் கலந்து விடுகின்றன! 'நான் கூவம் நதி தீர வாசி' என்ற சங்கற்பத்துடன் நடந்து கொள்கிறாள்.

ராமன் காணும் லங்காசுந்தரி

திருமதி இலங்கா சுந்தரியோ வறு மையென்பதையே அறியாள்; போகமே இவள் அறிந்த சேறு. சோகத்தை அறி யாள். பொன்னும் மணியும் கொட்டிக் கிடக்கின்றன பார்க்கும் இடமெங்கும்: இப்பொருளை இவள் கண்ட இருள்!— பிறர் இரத்தம் கொட்டிச் சம்பாதித்துக் கொண்ட பாவச் சுமை!

மாளிகைகள் மீது பட்டொளி வீசிக் கொடிச் சீலைகள் பறக்கின்றன. இவை மேகமாகிய மாசு நீங்க வானத்தைத் துடைப்பது போலக் காண்கின்றன வாம்:

> வீசுபொற் கொடிகள்
> எல்லாம், விசும்பினின்
> விரிந்த மேகம்
> மாசறத் துடைத்(து)அவ்
> வானம் விளக்குவ
> போலும் மாதோ!

[விசும்பின் – ஆகாயத்திலே.]

லங்கா சுந்தரி முகமூடி அணிந்து கொள்ளாவிட்டாலும் செயற்கை யழ கைக் கொண்டு தன் இயற்கையழகை மூடி மறைத்து விடுகிறாள் என்பதற்கு இந்த வருணனையை ஓர் அறிகுறியாகக் கொள்ளலாம்.

கலைச் செல்வங்களும் இலங்கையில் உண்டு; சித்திரத் தொழிலுக்கோ, சிற் பத் தொழிலுக்கோ என்ன குறைவு இங்கே! ஆனால் எல்லாம் இயற்கை யழகைத் துடைத்துச் செயற்கை யழகை விளக்குவது தான்!

அரக்கர் தலைவர்களின் மாளிகைகளுக்கு நடுவே ராவணனது மாளிகை அமைக்கப் பெற்றிருக்கும் சிற்பத் திறனைத் தான் என்னென்பது! அந்த மாளிகைகளைச் சுற்றிலும் உள்ள மணிகளாகக் கொண்டு இந்த 'லங்கேச்வர பவனம்' நடுநாயக மாய் அமைந்திருக்கிறது.

'நீங்கும் அந்தோ இந்த நெடுநகர்த் திரு!' என்று அனுமனையும் அனுதாபக் கண்ணீர் வடிக்கச் செய்த சிற்பச் செல்வ மல்லவா இலங்கைச் செல்வம்!

பல நிறமுள்ள இரத்தினங்களாலும் தன் உடம்பை மூடி அலங்கரித்துக் கொண்டிருக்கும் லங்காசுந்தரி, தூய வெண்ணிறமுள்ள பளிங்குக் கற்களினால் செய்த மாளிகைகளுக்கும் சொந்தக்காரி தான்! 'நீரினால் கட்டப்பெற்ற மாளிகை களோ இவை!' என்று பிரமிக்கும்படி மயக்கம் விளைகின்றது, ஆனால் 'வெள் ளைக்கில்லை கள்ளச் சிந்தை' என்பது இம் மாளிகைகள் விஷயத்தில் பொருந்துமா!

இம் மாளிகைகளை,

> மாரனும் மருளச்
> செய்த மாளிகை.

[மாரனும் – மன்மதனும்.]

என்று குறிப்பிடுகிறான் ராமன். இந்தப் போக பூமியிலே மன்மதன் மயக்கு கிறான்; தானும் மயங்கிப் போகிறான். மயக்கங்கள் அதிகம்; அறிவுத் தெளிவே குறைவு!

உபரிகையில் பதித்திருக்கும் சிவந்த இரத்தினங்களின் சுடரை ஏதோ தளி

றேன்று ஓட்டகங்கள் மயங்குகின்றன வாம். இது லங்கா சுந்தரியின் பல்வேறு மயக்கங்களுக்கும் ஓர் அறிகுறி.

இவ்வளவு மயக்கம் விளைக்கின்ற இந்த லங்கா சுந்தரியைச் சற்றும் மயக்கம் இல்லாமலே உற்று நோக்கி மீண்டான் அனுமன்.

மயக்கற நாடி
ஏகும் மாருதி

என்பது சுந்தர காண்டத்தில் கவிக் கூற்று. சுவேல மலை என்ற குன்றிலிருந்து இப்போது பார்க்கிற ராமனும் மயக்க மில்லாமலே நோக்குகிறான் என்பதைச் சொல்லவா வேண்டும்!

ஆனால் ராமனது மயக்கமின்மையைக் கம்பன் தெரிவிப்பதே ஒரு கம்ப சூத்திர மாகி, லங்கா சுந்தரியின் பலவீனத்தை உள்ளபடியே சுட்டிக்காட்டுகிறது:

காவலன் பயந்த
வீரக் கார்முகக்
களிறே! கற்ற

தேவர்தம் தச்சன்
நீலக் காசினால்
திருத்தச் செய்த(து),

ஈவது தெரியா
உள்ளத்(து) இராக்கதர்
ஈட்டி வைத்த

பாவபண் டாரம்
அன்ன செய்குன்றம்
பலவும் பாராய்!

[காவலன்–தசரத சக்கரவர்த்தி. பயந்த–பெற்ற. கார்முகம்–வில். களி றே–ஆண்யானை போன்றவனே. தேவர் தம் தச்சன்–தெய்வத் தச்சனான விசுவ கர்மா. நீலக் காசு–நீல இரத்தினங்கள். ஈட்டி–சேர்த்து வைத்த. பாவ பண்டா ரம் அன்ன–பாவத்தின் பொக்கிஷம் போலவுள்ள.]

எடுப்பதே தவிர அரக்கர்கள் கொடுப் பதேயில்லையாம்.

இரக்கம்என்(று) ஒருபொருள்
இலாத நெஞ்சினர்

அல்லவா! இவர்கள் ஈட்டி வைத்த 'பொய்த்திரு'வைப் 'பாவ பண்டாரம்' என்று லட்சுமணனுக்குக் காட்டுவது பொருத்தம்தானே.

'நான் போகச் சேற்றில் உழல்பவள்; பாவச் சகதியில் உறைபவள்!' என்று திருமதி இலங்கை ஒப்புக் கொள்வது போலவே தோன்றுகிறது.

சூரியோதயத்தில் இலங்கையின் அழகு களும் அலங்காரங்களும் இரத்தின சோலைகளும் ஜொலிக்கின்ற அந்த மாட்சியை என்னென்பது!

விரிகின்ற கதிர
வாகி மிளிர்கின்ற
மணிகள் வீசச்

சொரிகின்ற சுடரின்
சும்மை விசும்புறத்
தொடரும் தோற்றம்,

அரிவென்ற வெற்றி
யாற்றல் மாருதி
அமைத்த தீயால்

எரிகின்ற தாமே–
காண்இக் கொடிநகர்
இருந்த தின்னும்!

[கதிரவாகி–கிரணங்களை உடையன வாய். சும்மை–தொகுதி. விசும்புற–வானளாவ. அரி வென்ற–பகைவர்களை வென்ற. மாருதி–அனுமன். கொடிநகர்–கொடிகள் கட்டிய நகரம்.]

ராமனுக்கு வேறொன்றும் சொல்லத் தோன்றவில்லை, தீச்சுடர்களைப் போல் இரத்தினச் சுடர்களைச் சொரிந்து கொண் டிருக்கும் இலங்கையை நோக்கியதும்: 'அனுமன் வைத்த தீ இன்னும் அணையா மலே எரிகின்றது போலும்! தம்பி, நீயே பார்த்துக் கொள்.'

ராவணனது கொடி நகரமாகிய கொடிய நகரத்திற்கு எவ்வளவு பொருத்தமான வருணனை!

* * *

அயோத்தி, தரும பொக்கிஷம்; அறிவுப் பொக்கிஷம். மிதிலையின் செல் வக் களஞ்சியம் கல்வியன்று: உணர்ச்சி களின் சிகரமாகிய காதல். இலங்கையோ பாவ சிகரங்களான அரக்கர் தலைவர்கள் கட்டி வைத்த 'பாவ பண்டாரம்'.

அயோத்தி என்றால் அறிவுத் தெளிவு; தெள்ளத் தெளிந்த அறிவு நல் லறமாக மலர்ந்து போகமாகக் கனியும் நிலம். மிதிலை யென்றால் அறிவை மயக் கும் காதலும் தன் ஆற்றலால் அறம் வளர்க்கும் பண்ணை. இலங்கையென்றால் அறத்தை எரிக்க மூட்டிய தீ. அயோத்தி ஞான சுந்தரி; மிதிலை கலா சுந்தரி; லங்கா சுந்தரியோ தீவினை யின் தீயழகு, மோகினிப் பேய்.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

56. தம்பியே! பார்.

உத்தம சகோதரனுக்கு உதாரணமாகப் பரதனையே காட்டுகிறார்கள். எனினும், அந்நியோன்னியமாக இருக்கும் அல்லது இருக்க வேண்டிய இரு சகோதரர்களுக்கு ராம லட்சுமணரையே லட்சியமாக எடுத்துக் காட்டுவதும், ராம லட்சுமணப் பெயர்களை இடுவதும் மரபு.

லட்சுமணன் சிறப்பு (இளையபெருமாள்)

'எல்லாரும் உத்தம சகோதரர்களாக இருந்து விட்டால் பரதனை உத்தமன் என்று சுட்டிக் காட்டுவது எப்படி!' என்று பொருள்பட ராமனே லட்சுமணனிடம் பரதனைச் சிறப்பித்துப் பேசுகிறான் கிஷ்கிந்தா காண்டத்திலே. பரதன் மீது சந்தேகம் கொண்ட லட்சுமணனை ராமன் கண்டித்துப் பேசுவதே ஓர் அருமையான கம்ப சித்திரமாக அமைந்திருக்கிறது.

வேறு சந்தர்ப்பங்களிலும் ராமன் லட்சுமணனைக் கண்டித்ததுண்டு. எனினும் இந்த அண்ணனுக்கு அந்தத் தம்பி மீதுள்ள சகோதர வாஞ்சை அலாதியான சிறப்பு வாய்ந்தது என்பதில் ஐயமில்லை.

சித்திரகூடத்தில் பர்ணசாலை அமைத்துக் கொடுத்து விட்டான் லட்சுமணன். தச்சுவேலை கொத்து வேலைகளை எங்கே, எப்போதுதான், கற்றுக் கொண்டானோ! 'என்று கற்றனை நீ இதுபோல்!' என்று ராமன் கள்ளங் கவடறியாத தன் கண்மலர்களில் பனி சோரக் கேட்டுவிட்டான். 'நெடு நாளாக இடர் உனக்கு இழைத்தேனப்பா!' என்றும் சொல்லி விட்டான்.

அப்போது லட்சுமணனுள்ளம் பட்ட பாட்டை அறிந்து கொண்ட பின், லட்சுமணன் முன்னிலையில் ராமன் அப்படிப் புகழத் துணியவில்லை.

ராமனுடைய தேவை சீதைக்கும் தெரிவதற்கு முன்பே லட்சுமணனுக்குத் தெரிந்து விடும்: அப்படித் தொண்டாற்றி வந்திருக்கிறான் வனவாச காலமெல்லாம். என்றாலும், தம்பி அறிய ராமன் பாராட்டுரையும் வழங்கியதில்லை, அந்தப் போசனை தம்பியின் உள்ளத்தை அது புண்படுத்துமே யென்று!

மாய மான் சீதையுள்ளத்தை மயக்கியதல்லவா! ராமனும் மயங்கிப் போனான் சீதை மீதுள்ள காதலால். அப்போது லட்சமணன்தானே அறிவுத் தெளிவுடன் எச்சரிக்கை செய்தான்!

ராமன் 'ஒப்புக் கொள்ளாமலே விரைந்து போய்விட்டான். கடைசியாகத் தம்பி சொன்னதே சரியென்று தெரிந்து கொண்டதும் ராமன் தனக்குள் தானே சொல்லிக்கொண்டதென்ன!

'ஐயன் வல்லன்; என்
ஆருயிர் வல்லன்; நான்
உய்ய வந்தவன்
வல்லன்?' என்(று)
உன்னினான்.

[உன்னினான் – நினைத்தான்.]

உயிரனைய உத்தம சகோதரன் பரதன் என்றால், லட்சுமணன் ராமனால் 'என் உயிர்' எனறே பாராட்டப் பெற்றவன். இதை வெளிப்படையாகச் சொல்லவும் முடியவில்லை ராமனால் லட்சுமணன் முன்னிலையில்!

'நான் உய்ய வந்தவன்' என்ற பாராட்டுரையும் லட்சுமணனுக்கே உரியது. உலகம் உய்ய வந்த ராமன் உய்ய வந்தவன் லட்சுமணன்! தட்சிணாமூர்த்தி போல் சொல்லாமல் சொல்லி வைக்கும் பாராட்டுரை தான் இதுவும்.

பரதனும் ராமனுக்காகத் தியாகம் செய்தவன் தான். பாதுகா பட்டாபிஷேகம் செய்து நகர வாசமும் துறந்து கண்

னீரோடு ராஜ்யபாரம் தாங்கியவனல்லவா? ராமன் எப்படி அறத்தின் நிலையமோ, அப்படியே பரதன் நீதியின் நிலையம். தியாகப் போட்டியில் ராமனுக்குச் சிறிதும் இளைத்தவனல்லன் இந்த இளையவன். ஆனால் லட்சுமணனுடைய தியாகத்தில் போட்டி-அம்சமே கிடையாது. இது ராமனுடைய தியாகத்தின் நீங்கா நிழல்தான்!

சீதையைப் போல் தானும் ராமனுக்கு இன்றியமையாதவன் என்பது லட்சுமணனது சகோதர தர்மம். 'நீர்நிலைக்கு மீனும் நீல மலரும் போல் இருக்கிறோம் நானும் சீதையும் உனக்கு!' என்பது ராமனை நோக்கி லட்சுமணன் கூறியது, நகர் நீங்கும் சந்தர்ப்பத்திலே. இந்தச் சகோதர பாசத்திலே பதினாலு ஆண்டுப் பிரிவு சாத்தியமாகுமா?

விரதம் பூண்டு எப்படியோ உயிரை வைத்துக் கொண்டிருந்தான் பரதன், ராமனுடைய மீட்சியை நோக்கிய வண்ணம். லட்சுமணனோ நீரைப் பிரிந்த மீன் போலத் துடித்து உயிரையே விட்டிருப்பான் என்பது குறிப்பு.

'லட்சுமணனே என் உயிர்' என்றான் ராமன், மாரீசன் விழுந்ததும். 'ராமன் தானே எனக்கு உயிர்!' என்பது லட்சுமணனுடைய மன நிலை. 'இளைய பெருமாள்' என்று லட்சுமணனைப் பக்தர்கள் குறிப்பிடுவதும் உய்த்துணரத் தக்கது.


இந்த இளைய பெருமாள் வீரத்திலும் இளைத்தவனல்ல ராமனுக்கு. என்றாலும் லட்சுமண வீரம் அல்ல, லட்சுமண குணநிசயத்தின் முக்கிய அம்சம். தன்னை மறந்த அன்பு, ராமசேவையில் தன்னை முழுக்க இழந்த அன்பு,—இந்த அன்பு, இந்த அன்பேதான் லட்சுமண குண சித்திரத்தின் உயிர்நிலை.

'என் அண்ணன், என் குலத்திற்கு அண்ணல், உலகத்திற்கே அண்ணல்; இவனுக்கே என் அன்பு உரியது!'—இது லட்சுமண இருதயம்.

'அழகன் தன் மேல் எஞ்சலில் (இறவாத) அன்பு போர்த்த இளவல்' என்பது, காட்டுக்குள்ளே நள்ளிரவில் சீதையுடன் ராமலட்சுமணர் போகும் போது அந்த நிலவிலே லட்சுமணனை நமக்குக் காட்டும் கவிக் கூற்று.

தாய் ஒருத்தி குழந்தையுடன் இருளில் குளிரில் போய்க் கொண்டிருக்கிறாள். தன்னையும் குளிருக்கு இலக்காக்கிக் கொண்டு குழந்தையைப் போர்த்துக் காத்துப் போவாளல்லவா? அப்படியே லட்சுமணனும் தனக்கென்று வைத்துக் கொள்ளாமல் அந்த அன்புப் போர்வையை ராமனுக்கே உரியதாக்கி விடுகிறான்.

'நற்றாயும் நீ; தனிநாயகன் நீ; வயிற்றில் பெற்றாயும் நீயே!' என்றான் லட்சுமணன் ராமனை நோக்கி, நகர் நீங்கு படலத்திலே. இம்மனப் பான்மையுள்ளவன் தன் மனைவியையும் அவளுடைய உணர்ச்சிகளையும் கூடப் பொருளாகக் கருதாமல் ராமனைத் தொடர்ந்து வனம் புகுந்தான் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். லட்சுமண குணநிசயத்தின் திறவுகோலை இங்கே காணக் கூடுமல்லவா?



இத்தகைய தம்பிக்கும் அண்ணனுக்கும் கருத்து வேற்றுமைகள் ஏற்படத்தான் செய்கின்றன. ராமனுடைய மனநிலையை லட்சுமணன் எப்போதும் சரியாகப் புரிந்து கொள்கிறானென்றும் சொல்ல முடியாது. எனினும் ராமன் ஆணைக்கு எப்போதும் கீழ்ப்படிந்து நடப்பதே தனக்குரிய தருமம் என்பது இவன் கொள்கை.

ராமனுடைய விரோதிகளே லட்சுமணனுக்கும் விரோதிகள். . உண்மையாகவே அவர்கள் ராமனுக்கு விரோதிகளாக இருக்க வேண்டுமென்பதும் இல்லை; இவன் அப்படிச் சந்தேகப்பட்டாலே போதும். கைகேயி மகன் என்பதற்காகப் பரதனையும் சந்தேகித்தானல்லவா! காட்டிலும் தேடிப் பிடித்துச் சண்டை பிடிக்கப் பரதன் வந்துவிட்டானென்று லட்சுமணன் நம்பி விடவில்லையா!

ஆனால் கைகேயியின் தொடர்பில்லாத காரியங்களில் இத்தகைய மனக்குழப்பம் லட்சுமணனுக்கு ஏற்படுவதில்லை; இவனுடைய அறிவுத் தெளிவில் குறைவு ஏற்படுவதில்லையென்றே கருதலாம். இந்தத் தம்பியின் அறிவுத் தெளிவிற்கும் அறிவுக் குழப்பத்திற்கும் கூட அண்ணன் மீதுள்ள அதிசய அன்பே காரணம் என்று கூறலாம்.

ராமாயண கதையுடன் பரதனைக் காட்டிலும் நெருங்கிய தொடர்பு லட்சுமணனுக்குத்தான் என்பது தெளிவு. பரதனைத் தெரிந்து கொள்ளாதவர்கள் ராமாயணத்தின் அழகிலே பாதிக்குமேல் இழந்து விடுவர் என்று கூறுவதுண்டு. ஆனால் லட்சுமணனைத் தெரிந்து கொள்ளாதவர்களோ ராமாயண அழகை முழுக்க முழுக்க இழந்துவிடக் கூடுமே!

ராமன் லட்சுமணனை நோக்கி, 'விபீஷணனுக்கு நீயே மகுடம் சூட்டுவாய்' என்று சொல்லும்போது,

'துஞ்சலில் நயனத்(து)
ஐய! சூட்டுதி
மகுடம்' என்றான்.

[துஞ்சலில் – உறக்கம் இல்லாத. நயனத்து ஐய – கண்களையுடைய ஐயனே.]

'துஞ்சலில் நயனத்து ஐய' என்ற விளியில் அல்லும் பகலும் அநவரதமும் லட்சுமணன் செய்து வந்த அருமைப்



பெரும் பணி பாராட்டப் பெறுகின்றது. கடவுளுடைய உறங்காத கண் என்று சூரியனைக் கூறுவதுண்டு. ராமாயண உலகத்திலே ராமனுடைய 'உறங்காத கண்' லட்சுமணன்!

வெளிப்படையான பாராட்டு

இந்த லட்சுமணனுக்கு ராமன் சுவேலமலை என்ற குன்றிலிருந்து இலங்கையைக் காட்டுகிறான். முதன் முதல் கண்ட இலங்கையழகில் தானே மூழ்கிப் போய் அனுபவிக்கத் தொடங்குகிறான். விரைவில் அருகிலிருக்கும் லட்சுமணனை நோக்கி, 'பாராய்' 'காணாய்' 'நோக்காய்' என்றெல்லாம் காட்டுகிறான்.

வீர! நீ பாராய்

என்கிறான்.

பூசல்வில்- குமர!
நோக்காய்

[பூசல் வில் – போர் புரிகின்ற வில்.]
என்கிறான். 'நன்றாகப் பார்' என்கிறான்.

வில்லும் தோளுமா யிருக்கும் தம்பியின் வீர சௌந்தரியத்தை வியந்து பாராட்டுவது போல்,

விற்படி திரள்தோள்
வீர! நோக்குதி

[விற்படி திரள் தோள் – வில் படிந்துள்ள திரண்ட தோள்கள்.]
என்கிறான்.

கோல்நிறக் குனிவில்
செங்கைக் குமரனே!

[கோல் – அம்பு. நிறக் குனி வில் – ஒளியுள்ள வளைந்த வில்.]

கொற்றவான் சிலைக்கை
வீர!

[கொற்றவான் சிலை – வெற்றி பொருந்திய பெரிய வில்.]

வாகைவெஞ் சிலைக்கை
வீர!

[வாகை – வெற்றி மாலை. வெஞ்சிலை – கொடிய வில்.]
என்றெல்லாம் விளிக்கிறான்.

ராஜசிம்மம் போலத் தோன்றும் லட்சுமணனுடைய கம்பீரமான தோற்றத்தையும் அந்த இளஞ் சூரியனது பொன்னிறக் கதிரொளியில் கண்டு வியப்பது போல்,

கோள்அவா அரியே(று)
அன்ன குரிசிலே!

[கோள் அவா – கொல்லுதலை விரும்புகின்ற. அரியேறு – ஆண் சிங்கம். குரிசிலே – ஆண்களில் சிறந்தவனே.]
என்று லட்சுமணனை விளித்துப் பேசுகிறான்.

லட்சுமணனுடைய அறிவுத் தெளிவையும் பாராட்டி அந்த அறிவு நன்னெறி பற்றியே ஒழுகும் என்பதையும் குறிப்பிடுவது போல்,

நன்னெறி அறிஞ!
நோக்காய்

என்கிறான்.

இப்படியெல்லாம் சாதாரண காலங்களில் ராமன் லட்சுமணனைப் பாராட்டியிருக்க முடியுமா! லட்சுமணனால் தாங்க முடியுமா இந்தப் பாராட்டுரைகளை! 'என்று கற்றனை நீ இது போல்!' என்று அந்தக் குடிசை கட்டிய திறனை அன்று ராமன் பாராட்டியதும் இந்தத் தம்பியின் சிந்தை எப்படி நொந்து போயிற்று!

அன்று அதே சித்திரகூடத்தின் அழகுகளை ராமன் சீதாதேவிக்குக் காட்டும் போது, 'மயிலே! குயிலே! அமுதே! விளக்கே! திருவே! கொழுந்தே!' என்றெல்லாம் விளித்து, 'காணாய், பாராய், நோக்காய்' என்று காட்டினான். அந்த மாதிரி அமைந்திருக்கிறது, இலங்கையின் அழகுகளை ராமன் லட்சுமணனுக்குக் காட்டும் இந்தக் கம்ப சித்திரமும்.

அங்கே சித்திர கூடத்தின் அழகுகளோடு சீதையின் அழகுகளையும் வியந்து பாராட்டுகிறானல்லவா ராமன்! உருவ அழகையும் பாராட்டுகிறான்; குண அழகையும் பாராட்டுகிறான். இங்கும் பாராட்டு அந்த முறையில் அமைந்துவிட்டது போலத் தோன்றுகிறதல்லவா!

வசீகரமான காலை வேளையில் ராமன் தம்பியைப் பற்றி உள்ளத்தின் உள்ளே பூட்டி வைத்திருந்த பாராட்டை அப்படியே வெளிப்படுத்துவது போல், 'தம்பியே! – பார்; தம்பியே! பார்' என்று இலங்கைக் காட்சிகளைக் காட்டுகிறான்.

'இந்தச் செயற்கை யழகுகளெல்லாம், படாடோபமான ராட்சஸ காரியங்களெல்லாம் 'பாவ பண்டாரம்'தான்; மோகினிப் பேயழகுதான்; அணையப் போகும் தீயின் மாயச் சுடரழகுதான்! நன்னெறி அறிஞனாகிய நீயா மயங்கப் போகிறவன்!' — இது ராமன் கூற்றின் ஸாரம்.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

57. பேய்க்கு வேதமா ?

இலங்கா சுந்தரியின் பாவ பொக்கிஷத்தை ராமலட்சுமணர் கருத்தொருமித்துப் பார்க்கும்போது, இருவர் குண சித்திரங்களும் ஒருங்கே சோபிக்கக் காண்கிறோம், இலங்கையின் படாடோப சோபைகளுக்கிடையே.

ஈவது தெரியா
உள்ளத்(து) இராக்கதர்
ஈட்டி வைத்த
பாவபண் டாரம்

என்று பேசுகிற குணசித்திர சோபை கம்பனது கற்பனைக்கு உட்படுகின்ற 'மாசற்ற ஜோதி'யே தான்.

இப்படிப் பேசுகிறவன் ஒரு முனிவனாக இருக்க வேண்டும் அல்லது ராமனாக இருக்க வேண்டும். — வேறு யாராகத் தான் இருக்கமுடியும்?

ராமன் என்ற குண சித்திரம்

கோசலநாட்டின் 'மெய்த் திரு'வை அநாயாசமாக மும்மடங்கு பொலிந்த முக மலர்ச்சியுடன் துறந்து வந்தவன், இலங்கையின் பொய்த்திருவைப் 'பாவ பண்டார'மாகக் குறிப்பிடுவது எவ்வளவு பொருத்தமானது! குண சித்திரங்களை இப்படியெல்லாம் உருவாக்குவதும் வளர விடுவதும் உலகப் பெருங் கவிஞர்களின் ஒரு சிறப்பியல்பு.

ஒரு வாக்கியம்—ஏன், 'பாவ பண்டாரம்' போன்ற ஒரே சொற்றொடர்—போதும் 'யார் பேசுகிறார் ?' என்பதைத் தெரிந்து கொள்வதற்கு. 'ஈவது தெரியா உள்ளத்து இராக்கதர்' என்று சொல்லுகிறவன், 'ஈத்துவக்கும் இன்பம்' என்று திருவள்ளுவர் சொல்லுகிறாரே அந்த இன்பத்தின் உச்சி கண்டவனல்லவா !

'இரக்கம் என்றொரு பொருள் இலாத நெஞ்சினர்' என்று முதன் முதல் இந்த அரக்கர்களை அறிமுகப்படுத்திடவர்கள் தண்டகாரணியத்து முனிவர்கள். ராமனோ ஜடையும் மரவுரியுமாக ஒரு 'ராஜரிஷி' போலத் தானே யிருக்கிறான் !

பிறர்க்கு 'நல்கக் கற்றாய்' என்றான் லட்சுமணன். 'கள்ளக் கைகேசிக்கே உதவிப் புகழ் கைக்கொண்ட வள்ளல்-தனம்' சக்கரவர்த்தியையே மாய்த்து விடுகிறது!

ராம குணாதிசயம் வால்மீகி பகவானின் தெய்விக மேதை செய்த அற்புத கலா சிருஷ்டி. அந்த உத்தம புருஷனை முன்னிலும் சோபையுடன் — ஏன், இதுவும் ஒரு புதிய சிருஷ்டி என்றே வியக்குமாறு — படைத்துக் காட்டும் குணசித்திர அமைப்புத் திறனைக் கம்பனிடம் காண்கிறோம்.

'செவிக்குத் தேன் என இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகன்' என்று அனுமனைப் பற்றி வரும் கவிக் கூற்றிலே கவிஞனது சிருஷ்டி - சங்கற்பமும் உய்த்துணரத் தக்கது.

இமயம் முதல் கன்யாகுமரி வரையுள்ள மக்களின் இதய சிம்மாசனத்திலே பட்டாபிஷேகம் செய்து வைத்து விட்டார் ராமனை வால்மீகி யென்றால், கலையுலகில் அது ஓர் இமாலய சிருஷ்டியே தான். அதை அபிவிருத்தி செய்வதென்பது 'தங்கத்திற்கு மூலாம் பூசுவது தானே ! அமிர்தத்திற்குப் பனை வெல்லத்தின் இனிப்பையும் ஊட்டுவது தானே!' என்று கேட்கலாம்.

அப்படியல்ல; கம்பன் ஒரு புத்தமுதமாகிய உண்மைக் கலா சிருஷ்டியே செய்திருக்கிறான். இதற்குக் கம்பராமாயணமே சான்று.

வால்மீகியின் உத்தம புருஷன் லட்சிய புருஷனாகிப் பக்த மணிகளின் உள்ளத்திலே புருஷோத்தமனாகிய பரம்பொருளாகவும் கோயில் கொண்டு விட்டான், கம்பன் காலத்திற்கு முன்பே. அந்த நிலையில் ராம குண சித்திரத்தை மானுடப் பண்பிற்கிசைந்தவாறு காவியம் எங்கும் படர விடுவது எந்தக் கலைஞனுக்கும்

பெருந்தொல்லை கொடுக்கக் கூடிய காரியம்தான். 'தெய்வம் என்றால் குணசித்திர வளர்ச்சி ஏது!' என்று கேட்பது எளிதல்லவா!

வால்மீகத்திலே சிற்சில இடங்களில் தான் ராமனது தெய்வத் தன்மை வெளிப்படையாகப் பிரஸ்தாபிக்கப்படுகிறது; இந்த இடங்களை இடைச்செருகல் என்று கருதும் ஆராய்ச்சியாளர் உண்டு.

பொதுவாக உத்தம புருஷனது வீர சரித்திரம்தான் வால்மீகி ராமாயணம். எனவே, 'வால்மீகத்தில் இயற்கையாகக் காணும் குணசித்தரத்தைக் கம்பன் கெடுத்து விடாமல் இருப்பதுதான் எப்படி!' என்றெல்லாம் கம்பனைக் கற்காமலே விவகரிப்பவர் உண்டு.



இத்தகைய 'இலக்கிய' வாதங்களுக்கெல்லாம் ஒரே பதில், 'காவியம் கற்கும் முறையில் கம்பனையும் கற்றுப் பாருங்கள்' என்பதுதான். மனித உணர்ச்சிகளைக் கம்பனது அவதாரமூர்த்தி எப்படியெல்லாம் வெளியிடுகிறான்!

பிரிவுத் துயரம், தந்தையைக் குறித்த சோகம், நட்புக் காதல், சகோதர வாஞ்சை முதலான பல்வேறு உணர்ச்சிநிலைகளிலும் ராம குணநிசயம் இயற்கையாக வளர்ந்தோங்கக் காண்கிறோம். 'அவதார மூர்த்திக்கு இத்தகைய உணர்ச்சிகளும் செயல்களும் பொருந்துமா!' என்று கேட்கத் தோன்றுவதேயில்லை!

கம்பனுடைய ராமகுண சித்திர அமைப்பு முறை விளங்க வேண்டுமென்றால், பைபிளில் காணும் கிறிஸ்து பெருமானுடைய, தெய்வத் தன்மையும் மனிதத் தன்மையும் கலந்து உறவாடுகின்ற, அற்புத குணநிசயத்தை உற்று நோக்க வேண்டும் என்பர் வ. வே. சு. ஐயர்.

ராமனுடைய தெய்வத் தன்மை கம்பனுடைய காவியத்தின் கம்பீர மாட்சியை வானளாவத் தூக்கிக் காட்டுகிறது என்றால், ராமனுடைய மானுடப் பண்பும் உணர்ச்சிகளும் செயல்களும் காவிய ரஸத்தை வற்றாத ஜீவ கங்கையாகப் பெருக்கெடுத்து ஓடச் செய்கின்றன.

கம்பன் தன்னுடைய ராமனை அவதார மூர்த்தியாகக் காட்டுவதுடன் மானுடத்தின் வெற்றியாகச் சித்திரிக்கிறான், ஏறக்குறையக் காவியம் எங்குமே இத்தகைய மானுட வெற்றி தெய்வத்திற்கும் வெற்றியே!

இந்த நோக்கத்திற்கு இணங்க வால்மீகத்திலிருந்து வேறுபாடுகளையும் மாறுபாடுகளையும் தாராளமாகச் செய்து கொண்டிருக்கிறான்; இந்த வேற்றுமைகளை மீண்டும் வற்புறுத்தி வாசகர்களைச் சிந்திக்குமாறு தூண்டுவதுமுண்டு.



வால்மீகி-ராமனைக் காட்டிலும் கம்பனுடைய ராமன் அதிக அளவில் துறவு-மனப்பான்மையை வெளியிட்ட போதிலும், பிறர் துன்பம் கண்டு நீராய் உருகும் தன்மையனாகச் சித்திரிக்கப் படுகிறான். தன் உயிருக்குத்தான் இரங்குவதில்லை; பிற உயிர்களுக்குக் கருணை பொழிந்த வண்ணமா யிருக்கிறான்.

சுகசாரணர் என்ற வஞ்சக ஒற்றர்களை வானரர் முதுகில் குத்திக்கொண்டு வந்த போது,

கருணையால் அழுத
கண்ணன்

ஆக அல்லவா காட்சியளிக்கிறான்!

சிறுவனாக இருக்கும்போதே எதிரே வந்தவர்களை நோக்கி, 'உங்களுக்கு நான் செய்யக் கூடியதென்ன! நீங்கள் சுகமா யிருக்கிறீர்களா! உங்கள் மனைவி மக்கள் எல்லாரும் நலமாயிருக்கிறார்களா?' என்றெல்லாம் க்ஷேமம் விசாரித்ததாகப் 'பாலகாண்ட'த்திலே தெரிந்து கொண்டிருக்கிறோம்.

'குழந்தையே மனிதன் தந்தை!' என்ற உண்மை தானே அது! அந்தக் கருணை-முதிர்ச்சியைப் பகைவனுடைய ஒற்றர்களுக்கும் இரங்கி அருள் செய்கிற சந்தர்ப்பத்தில் கண்டுகொள்கிறோம்.

தன்னுயிர் போல் மன்னுயிரை நேசிக்கிறான் என்று கூறப்படுவது பிறருக்குப் பெருமைதான்; ஆனல், அது ராமனுக்குப் பெருமையாகாது என்றார் வசிஷ்டர் அயோத்தியா காண்டத்திலே, மந்திராலோசனை மன்றத்திலே. ராமன் தான் தனக்கு இரங்குவதில்லையே!

ஆகவே, தந்தையாகிய தசரதனை நேசித்தது போல் குடிகளை யெல்லாம் நேசித்தான் ராமன் என்றார் அந்த ஞானகுரு. 'அரசன் குடிகளுக்குத் தந்தை' யென்ற பழைய கொள்கையைப் புரட்சிகரமாகக் 'குடிகளே அரசனுக்குத் தந்தை' என்று மாற்றி விடுகிறான் கம்பனது அவதாரமூர்த்தி!

மானுடத்தின் வெற்றியே அவதாரம்

ராமனது இந்தப் புரட்சிமயமான அன்பும் கருணையும்தான் குகன் முதலானவர்களையும் சகோதரர்களாக்கிக் கொள்கின்றன. தோணி ஓட்டிய

ஏழைவேடனுனல் என்ன? தன் மனைவியைக் கவர்ந்த பாதக அரக்கனது தம்பியானுல்தான் என்ன! அன்பே பெரிது; சகோதர தருமமே தருமம் ராமனுக்கு.

ராமாயணத்தைப் பக்தர்கள் சரணுகதி சாஸ்திரமாக்கினுர்களென்ருல், கம்பன் சகோதர தர்ம சாஸ்திரமாக்கி விடுகிருன். காவிய நாயகனது குணுதிசய வளர்ச்சியிலேயே.

சரணுகதர்களுக்கு அருள் புரிந்ததால் ராமன் அவதாரமூர்த்தி என்பது பக்தர் நிலை. அதே அவதார மூர்த்தி ஸர்வ ஜன சகோதர தருமத்தை அனுஷ்டித்துக் காட்டி மானுடத்தின் வெற்றியாகிருன் என்பது இக்கவி மேதையின் நிலை.

'நிலம் ஆளும் என் உரிமையில் உனக்கும் பங்கு உண்டு; தோணி ஓட்டும் உன்னுடைய உரிமையிலும் எனக்குப் பங்கு உண்டு' என்று கங்கை வேடனை நோக்கி ராமன் சொன்னுனே, அந்தப் புரட்சிகரமான சமதர்ம வார்த்தை மானுடத்தின் வெற்றியாவதுடன் 'என் அவதார மூர்த்திக்கும் வெற்றிதான்!' என்று கவிஞன் கருதுவது போலத் தோன்றுகிறது.

ராவண வதம் அல்ல ராமனின் வெற்றி. ராவணனையும் திருத்திச் சகோதரனுக்கிக் கொள்ளாதது ஒரு வகையில் தோல்வி தானே!

வாலி வதத்திலாவது வாலி இறுதியில் தன் ஆணவம் துறந்து அருளப் பெற்ருன். ராவணுகாரமான ஆணவமோ இறந்து கிடந்த முகத்திலும் பொலிந்தது என்பது கம்பன் கதை. வாலி வதத்தை வெற்றி என்று சொல்ல முடியும்; ராவண வதத்தை வெற்றியென்று சொல்வதெப்படி?

கொல்லப்பட்டதும் ராவணனுடைய முகம் திக்விஜய காலத்தினும் மும்மடங்கு பொலிவுற்றிருப்பது போலக் காணப்பட்டதாம், முடிதுறந்து காடு செல்லும் ராமனுடைய முகம் மும்மடங்கு பொலிந்தது போல! வாலிபோல் பணிவுற்று ஆணவம் துறந்து ராவணன் ராமனை மருத்துவனுகக் கண்டு கொள்ளவில்லையே!

குகனைப் போன்றவர்களுடனும் உறவாடிய சகோதர தர்மமும் சம தர்மமும் இந்த அவதார மூர்த்திக்கு வெற்றி!

'யாவர்க்கேனும் எளியவர்க்காயினும் — சாவப் பெற்றவரே தகை வானுறை தேவர்க்கும் தொழும் தேவர்கள் ஆகுவார்' என்று அபயமடைந்த முனிவர்களிடம் தியாக மரணத்தின் தெய்வத் தன்மை பேசினுனே ராமன், அது ராமனுக்கு வெற்றி.

ஜடாயுவின் மரணத்தைத் 'தெய்வ மரணம்' என்று சுட்டிக்காட்டி 'அத்தகைய மரணத்திற்கு மகனுகிய எனக்கு உரிமை இல்லையா!' என்று கேட்டது என்றும் வாடாத வெற்றி.

விபீஷணன் ராவணன் தம்பியானதால் சூழ்ச்சி செய்து கொல்லக் கூடுமே என்று சொன்ன நண்பர்களை நோக்கி,

> இறந்தநாள் அன்ருே
> என்றும் இருந்தநாள்!

என்று ராமன் பதில் சொன்னுனே, அந்த மனநிலை மானுடத்தின் வெற்றி; அவதாரத்திற்கும் வெற்றிதான்.

அதே மனநிலை ராவணுதி ராட்சஸர்களுக்கும் கூடுமானுல் கொல்லாமலே அருள் செய்யக் கூடியதுதான். அது கூடாததால் கருணைக் கடல் கிராதர்களின் கொலைத் தொழிலும் பூண்டு மறக் கருணை புரிந்து அரக்கர்களின் துயரத்தையும் துடைத்தான் என்பது கம்பனுள்ளம்.

நடராஜ தத்துவம் சேக்கிழார் வர்க்கில் ஓர் அழகிய செய்யுளுருவம் பெற்றிருக்கிறது:

> கற்பனை கடந்த சோதி,
> கருணையே உருவ மாகி,
> அற்புதக் கோலம் நீடி,
> அருமறைச் சிரத்தின் மேலாம்
> சிற்பர வியோம மாகும்
> திருச்சிற்றம் பலத்துள் நின்று,
> பொற்புடன் நடம்செய் கின்ற
> பூங்கழல் போற்றி! போற்றி!

இந்த நடராஜ தத்துவத்தை நினைப்பூட்டுகிறது, ராமனைக் குறித்து மாலியவான் ராவணனிடம் கூறுவதும்:

> மாசற்ற சோதி
> வெள்ளத்(து) உச்சியின்
> வரம்பில் மேலாம்
> ஈசற்கும் ஈசன்
> வந்தான் என்பதோர்
> வார்த்தை இட்டார்!

சத்திய நித்திய ஜோதிக்குக்கருணையால் உருவம் வருகிறது; அற்புத அழகும் பிறக்கிறது. இந்தக் கருணை உருவம், இந்த அற்புத அழகு சேக்கிழாருக்கு நடராஜா; கம்பனுக்கு ராமன்.

ஆனுல் ராமன் தெய்வத் தன்மையை ராவணனது தாய்ப் பாட்டனுன மாலியவான் ஏன் பிரஸ்தாபிக்க வேண்டும்? ராவணனிடம் ஏன் பிரஸ்தாபிக்க வேண்டும், பேய்க்கு வேதம் உணர்த்துவது போல!

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

58. பாட்டனும் பேரனும்

ராம லட்சுமணர் சுவேல மலை என்ற குன்றின் மீது ஏறி இலங்கையைக் காண்பதற்கு முன்பே, ஒற்றர்கள் செய்தி சொல்லிப் போனபின்பு, ராவணன் சபை கூட்டி, 'இப்போது செய்ய வேண்டியது என்ன!' என்பது குறித்துச் சேனாபதி முதலானவர்களுடன் ஆலோசித்துப் பார்த்தான். அந்தக் கூட்டத்திற்கு ராவணனது தாய்ப்பாட்டனை மாலியவானும் வந்திருந்தான்.

படைத் தலைவன் பேச்சு

'இப்போது செய்யத் தக்கது போர்தான்' என்றான் சேனைத் தலைவன். 'எதிரிகள் உள்ள இடத்திற்கே போய்ப் போர் செய்யலாமோ?' என்று கூட இப்படைத் தலைவனும் பிற அரக்கர்களும் கருதியதுண்டு. அப்படியிருக்கையில், பகைவர்களே வலிய வந்தது நல்லதுதானே!

ஆயிர வெள்ளம் என்னும் தொகையுள்ள ராட்சஸப் படை இருக்கிறதல்லவா! இத்தகைய படைத்திறன் ஒரு புறம் இருக்கட்டும்; 'உன் ஒருவனைக் கண்ட மாத்திரத்திலே சிங்கத்தைக் கண்ட நாயினம் தானே எதிரிகளின் வானரக் கும்பல்களெல்லாம்!' என்றும் சொன்னான் படைத் தலைவன்.

ஆனால் ராவணேச்வரன் குரங்குகளை எதிர்த்துப் புறப்பட வேண்டுமா! 'நீ எனக்கு உத்தரவு கொடுத்தால் நானே பகைவர்களைத் துரத்தியடித்து விடுவேன்' என்று சேனைத் தலைவன் உறுதி கூறினான்.

'சேனையும் நானும் போய்ப் போர் புரிந்தால், எதிரிகள் உடனே முதுகு காட்டி ஓடுவார்கள்; ஓடிப்போய்க் கடலில் விழுந்து நாசமடைவார்கள்!' என்றான். இப்படிச் சொல்லிவிட்டு, 'எனக்கு விடை தருவாய், இந்திரன் முதுகு கண்ட லங்கேச்வரனே'. என்று பிரார்த்தித்துக் கொண்டான்.

அவதார மாட்சி

இந்த நிலையில் குறுக்கிட்டுத்தான் மாலியவான் 'ராமனை அவதார மூர்த்தியென்று சொல்லுகிறார்களே; தேவாதி தேவனே மானுடச் சட்டை தரித்து வந்திருக்கிறானுமே!' என்கிறான்.

'தசரதன் சிறுவன்' தன்னுடன் போரிட வந்திருப்பதாக அல்லவா ராவணன் கருதியிருக்கிறான்! மாலியவானோ,

பூசற்கு முயன்று
நம்பால் பொருதிரைப்
புணரி எல்லைத்
தேசத்துக்(கு) இறைவ
னான தெசரதன்
சிறுவன் தன்னை,
'மாசற்ற சோதி
வெள்ளத்(து) உச்சியின்
வரம்பின் மேலாம்
ஈசற்கும் ஈசன்
வந்தான்!' என்பதோர்
வார்த்தை யிட்டார்.

[பூசல் – சண்டை. பொரு திரை – மோதுகிற அலைகளையுடைய. புணரி எல்லை – கடலை எல்லையாகவுடைய. வார்த்தை இட்டார் – வார்த்தையைச் சொல்லுகிறார்கள்.]

'உலகத்திலே ஓசைப்படுகிறது ஒரு வார்த்தை; அதைத் தான் நான் கேள்விப்பட்டபடியே சொல்லி விட்டேன்' என்கிறான் மாலியவான்.

அடுத்த படியாக லட்சுமணனைக் குறித்தும் தான் கேள்விப்பட்டதைத் தெரிவிக்கிறான்.

இன்னணை என்ன
யாரும் இயம்புவர்;
ஏது யாதோ?

இன்அணை — இனிய படுக்கையான ஆதிசேஷன். இயம்புவார் — சொல்லுவார்கள். ஏது — காரணம்.]

'என் காதிற்படச் சொல்லுவார்கள் பலரும்; அதற்குக் காரணம் யாதோ!' என்று மாலியவான் கூறுவதும் ஊன்றி நோக்கத் தக்கது. 'கேள்விப்பட்ட செய்தி தான். எனக்கும் அந்த விஷயம் புரியவில்லை; என்றாலும் சொல்ல வேண்டியது என் கடமைதானே' என்பது இந்தப் பெருங்கிழவன் வாசகப் போக்கு.

ராமனது வானரங்களை யெல்லாம் சாதாரணக் குரங்குகளென்று கருதுவது சரியன்று; அந்த வீரர்களைக் குறித்தும் உலகம் ஏதேதோ சொல்லிக் கொள்கிறதாம்:

வாலிமா மகன்வந்
  தானை 'வானவர்க்(கு)
  இறைவன்' என்றார்;
நீலனை 'உலகம்
  உண்ணும் நெருப்பினுக்(கு)
  அரசன்' என்றார்;
'காலனை ஒக்கும்
  தூதன் காலும் கண்—
  ணுதலும்' என்றார்;
மேலும் ஒன்(று) உரைத்தார்:
  'அன்னான் விரிஞ்சனும்
  இனிமேல்!' என்றார்.

[வாலிமா மகன் — வாலியின் சிறந்த மகனான அங்கதன். வானவர்க்கு இறைவன் — தேவர்களுக்குத் தலைவனான தேவேந்திரன். காலனை ஒக்கும் தூதன் — யமனை ஒத்த தூதனான அனுமனை. காலும் கண்ணுதலும் — காற்றுத் தெய்வமும் நெற்றிக் கண்ணனாகிய ருத்திர மூர்த்தியும் சேர்ந்து வந்த ஒரு உருவம். அன்னான் — அவன். விரிஞ்சனும் — பிரம தேவன் ஆவான்.]

தேவராஜாவின் அம்சம் அங்கதன் என்றும், அக்கினி பகவானின் அம்சம் நீலன் என்றும் சொன்னவன், அனுமனை அப்படி ஒரு தெய்வத்தின் அம்சமாகச் சொல்லாமல், காற்றும் கண்ணுதலும் என்று சொன்னதுடனும் திருப்தியடையவில்லை! காலனையும் சேர்த்துப் பேசுகிறான்.

அடுத்த பிரம பட்டத்திற்கு அனுமன் காத்திருப்பதையும் நினைவூட்டுகிறான். 'உன்னுடைய கொள்ளுப் பாட்டன் இருக்கிறானே, அந்தப் பிரமதேவன் செத்ததும் அந்தப் பட்டமும் இனிமேல் அவனுக்குத் தானாம்' என்கிறான் இந்தத் தாய்ப்பாட்டன்.

அந்தப் பிரமபட்டத்தை அனுமனுக்குக் கொடுத்தவன் யார் தெரியுமா? 'உன் தம்பி விபீஷணனுக்கு உன்னுடைய பதவியை, உன் லங்கேச்வர பட்டத்தைக் கொடுத்த ராமன் தானப்பா!' என்கிறான்:

அப்பதம் அவனுக்(கு)
  ஈந்தான் அரக்கர்வேர்
  அறுப்ப தாக
இப்பதி எய்தி
  னான்அவ் இராமன் என்(று)
  எவரும் சொன்னார்.

[அவனுக்கு — அந்த அனுமனுக்கு. இப்பதி — இந்த நகரம்.]

இப்படிச் சொல்லுகிறவன், தன் பேரனது பகுத்தறிவுக்கும் பொருந்தப் பேச முயல்கிறான்:

ஒப்பினால் உரைக்கின் —
  றாரோ? உண்மையே
  உணர்த்தி னாரோ?

என்று கூறுவதைக் கேளுங்கள்.

'ஒரு வேளை ஒப்புமை பற்றி அவர்கள் சொல்வதாயிருந்தாலும் இருக்கட்டும்' என்ற வாக்கிலேதான் ராமனுடைய தெய்வ சௌந்தரிய மாட்சிக்கு எத்தகைய சான்று கிடைக்கிறது!

'தாய் அவள்!'

சீதையின் மாட்சியோ ராமனுடைய தெய்வ மாட்சியையும் வென்று விடுவது போலக் காண்கிறது. மாலியவானே சொல்லட்டும்:

ஆயது தெரிந்ததோ?
  தங்கள் அச்சமோ?
  அறிவோ யார்க்கும்
சேயவள் எளியள்
  என்னச் சிந்தையின்
  இகழல் அம்மா!
தூயவள், அமிர்தி
  னோடும் தோன்றினாள்,
  என்றும் தோன்றாத்
தாயவள் உலகுக்—
  கெல்லாம் என்பதும்
  சாற்று கின்றார்.

[ஆயது—ஆவது. யார்க்கும் சேயவள் — எவருக்கும் சேய்மையில் உள்ளவள்; அதாவது, தூரத்திலிருந்து வழி படுவ





தற்கு உரியவள். என்னு—என்று. இகழல் — இகழாதே.]

சீதையைக் குறித்து உலகம் — அதாவது உயர்ந்தோர்— பேசிக் கொள்வதைத் தான் மாலியவான் இவ்வளவு ஜாக்கிரதையாகவும் சாதுரியமாகவும் தெரிவிக்கிறான்.

நாவன்மை மட்டுமா, பண்பாடும் தொனிக்கிறது இங்கே. ஆயது தெரிந்தோ! தங்கள் அச்சமோ! அறிவோ!' என்ற பீடிகைக்குப் பின்,

தாயவள் அமிர்தி
னேடும் தோன்
றினுள்,
என்றும்
தோன்ருத்
தாயவள் உலகுக்
கெல்லாம்

என்று உலகம் சாற்றுவதைத் தெரிவிப்பதற்கு முன், 'யார்க்கும் சேயவள் எளியள் என்னுச் சிந்தையின் இகழல் அம்மா!' என்று பேரப் பிள்ளையின் க்ஷேமத்தில் எவ்வளவு கருத்துடன் எச்சரிக்கை செய்கிறான்!

'தசரதன் சிறுவன் தன்னை மாசற்ற சோதி வெள்ளத்து உச்சியின் வரம்பின் மேலாம் ஈசற்கும் ஈசன்' என்ற அந்த உலக வார்த்தையுடன் சீதையைப் பற்றிய இந்த உலகப் பேச்சை ஒப்பிட்டு, இரண்டு பாசுரங்களையும் ஓதி ஓதிப் பாருங்கள்.

அங்கே 'வார்த்தையிட்டார்' என்று சொல்லி விட்டு,

இங்கே 'சாற்றுகின்றார்' என்று மாலிய வான் கூறுவது கவனிக்கத்தக்கது. ராம னது தெய்வத் தன்மை குறித்த வார்த்தையைக் காட்டிலும்,

தாயவள் உலகுக்
கெல்லாம்

என்று சீதையைக் குறிக்கும் வார்த்தை அதிகமாய் ஓசைப்படுகிறது,— முரசு போல் முழங்குகிறது என்பது குறிப்பு.

சீதாராமரது தெய்வத் தன்மையை உலகப் பேச்சாக ராவணனுக்கு எடுத் துரைக்கும் மாலியவான், 'உன்னுடைய தம்பி விபீஷணனது ஞானப் பெருமை யைக் கூட நீ உணர்ந்து கொள்ளவில் லையே!' என்ற குறிப்புடன் விபீஷண னது அபிப்பிராயத்தை உலகம் பாராட் டிப் பேசுகிறது என்கிறான்.

இந்த வாக்கிலே விபீஷணனுடைய ஞான சொரூபத்தின் உயர்வு காணப் படுகிறது, அளந்து காட்டியதுபோல.

அம்பினுக்(கு) இலக்கம்
ஆவார் அரசொடும்
அரக்கர் என்ன,
நம்பரத் தடங்கும்
மெய்யன் நாவினில்
பொய்யிலாதான்
உம்பர்மந் திரிக்கும்
மேலா ஒருமுழம்
உயர்ந்த ஞானத்
தம்பியே சாற்றிப்
போனான் என்பதும்
சமையச் சொன்னார்.

[இலக்கம் – இலக்கு. அரசு – இலங்கை யரசனான ராவணனை. நம்பரத்து அடங் கும் – நமது பாரத்திலே அடங்கின; நம்மைச் சார்ந்திருந்த. உம்பர் மந்திரி – தேவ மந்திரியான பிரகஸ்பதி.]

'நீ ரொம்ப பிரகஸ்பதி தான்!' என்று முட்டாளைப் பரிகசிக்கும் போதும் ஞானத்தின் சிகரமான பிரகஸ்பதியை நினைவூட்டிக்கொள்வதுண்டு. அத்தகைய பிரகஸ்பதியையும் விபீஷணனையும் சேர நிறுத்திப் பார்த்தால் விபீஷணன் அங் குல கணக்கில் அல்ல ஒரு முழ உயரம் அதிகமாகவே யிருப்பானாம்.

இப்படி இந்தத் தம்பியின் ஞான உயர் வைக் குறிப்பிட்ட பின் மாலியவான் முடி வுரை கூறித் தன் பேச்சை முடித்துக் கொள்கிறான்:

'ஈதெலாம் உணர்ந்தே —
னாயும், என்குலம்
இறுதி யுற்ற(து)
ஆதியின் இவனால்
என்றும், உன்தன்மேல்
அன்பி னாலும்,
வேதனை நெஞ்சின்
எய்த வெம்பி, யான்
விளைவ சொன்னேன்;
சீதையை விடுதி
யாயின் தீரும் இத்
தீமை' என்றான்.

[உணர்தேனாயும் — உணர்ந்தவனா யிருந்தாலும். ஆவனால் என்றும் — இந்த ராமனாகிய திருமாலால் என்ற காரணத் தாலும்.]

* * *

இந்த மாலியவான் இதே இலங் கையிலிருந்து அடங்காச் செருக்குடன் உலகத்தை ஹிம்ஸித்துக் கொண்டிருந் தவன் தான். திருமால் மாலியவான் முத லானவர்களை இலங்கா நகரத்திலிருந்து பாதாளத்திற்குத் துரத்திவிட்டாராம். பிறகு இலங்கை குபேரன் வசமாயிற்று. அப்பால் ராவணன் இலங்கையைப் பிடித் துக் கொண்டதும் மாலியவான் முதலி யோர் மீண்டும் இங்கே குடியேறினர்.

தன் பழைய புதிய அனுபவங்களை யெல்லாம் வைத்துக்கொண்டு சமா தானமே பிழைக்கும் வழி என்று மாலிய வான் கூறி முடித்ததும், ராவணன் பாட் டனைப் பரிகசித்துப் பேசலானான். 'தாத்தா! நீ படித்த படிப்பு நன்று, நன்று!' என்று நகைத்துக் கொண்டே பேசினான்.

பாட்டனுக்குத் தன் பெருமையை உணர்த்தும்போதே, 'பேதை மானுடர் களுடனும் குரங்குகளுடனும் உலகங்க ளெல்லாம் ஒரு சேரத் திரண்டு என்னுடு போர் செய்ய வந்தாலும், சீதையின் பொருட்டு நிகழும் போரிலா நான் பின் வாங்கப்போகிறேன்!' என்று சொல்லித் தன் இதய — தூர்ப்பலத்தையும் தன்னை அறியாமலே வெளியிடலானான்.

இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போதே பொழுது விடிகிறது. ராமனும் லங்கையைப் பார்க்கிறான். ராவணனும் ஒரு கோபுரத்தில் ஏறி வானர முசனை யைக் காணப்போகிறான்.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

59. இருவர் கண்ட ராவணன்

கோபுர நிலையிலே கொலுவிருக்கிறான். இரு புறமும் வெண்சாமரங்கள் வீசுகின்றன. தலைமீது வெண் கொற்றக் குடை பிடிக்கிறார்கள். தங்கச் சரிகை ஆடை அணிந்து, முயல் இரத்தம் போன்ற நிறமுள்ள உத்தரீயமும் போட்டுக் கொண்டிருக்கிறான்.

அந்த மேலாடை மார்பை மறைத்து விட வில்லை. (திக்விஜய காலத்திலே) ஐராவத யானையின் தந்தங்கள் ஊன்றியதால் காய்த்து வயிரம் பாய்ந்தது போலிருக்கும் அந்த மார்பிலே சிவப்புச் சந்தனம் பூசியிருக்கிறான். மேனியோ நீலமேகம்போல.

மாலை வெயிலின் காந்தியில் அந்த அந்தி வானத்திலே மேகங்கள் விளங்குவது போலக் காணப்படுகிறானே. பொன் னிறம், இரத்த நிறம் முதலான நிற பேதங்கள் ஜொலிக்க, அவன் தான் வானத்துத் தேவர்களாலும் அணுக முடியாத அரக்கர்கோன். அவனை ராமன் கண்டான் என்பர் வால்மீகி தமது யுத்தகாண்டத்தில் 40-ம் ஸர்க்கத்திலே.

அதுவா இது?

இரத்தினச் சுருக்கமான இந்த ஆதி காவிய வருணனை ஒரு புதுமையான சப்த சித்திரமாக விரிகிறது கம்ப ராமாயணத்திலே. ஸ்தூலமாகப் பார்க்கும் போது, 'அதைத் தானே இவனும் சொல்லுகிறான்' என்று தோன்றக் கூடும், கவித்வ உணர்ச்சி இல்லாதவர்களுக்கு.

'அப்பேர்ப்பட்ட ராவணனை ராமன் கண்டான்' என்ற வால்மீகி - சித்திரம், 'அப்பேர்ப்பட்ட ராவணேச்வரன் ராமனைக் கண்டான்' என்ற கம்பசித்திரமாக மாறி விடுகிறது. ஆம்; ராவண தரிசனம் ராமதரிசனமாகிறது!

வால்மீகத்திலே ராவணன் தலைமீது பிடித்த வெண் கொற்றக் குடை அப்படியே தான் இங்கும் விளங்குகிறது:

மிக்து நின்றகுடை
மிது விளங்க.

அடுத்த பாட்டிலேயே, இருபுறமும் வீசுகிற வெண்சாமரங்களையும் காண்கிறோம்:

கைத்த ரும்கவரி
விசிய ......

அந்தச் சாமரம் வீசிய காற்றால்,

உத்த ரீகம்நெடு
மார்பின் உலாவ

என்று அதே பாட்டு வருணிக்கிறது. முயலின் இரத்த நிறம் என்று வால்மீகி வருணிக்கிறாரே, அந்த மேலாடைதானா? இல்லை; இந்த ஆடை அருவியின் வெண்ணிறமான பட்டாடை தான்.

'நீலமேக நிறமாய்...மாலை வெயிலின் காந்தியால் ஆகாயத்தில் மேகங்கள் விளங்குவது போல (ராவணன்) விளங்கி'யதாக வால்மீகி வருணித்து முடிக்கிறாரே அந்த மேகம் கூட,

நீர ணைத்தமுகி
லாமென நின்றான்

என்ற கம்பன் வாக்கில் பிரதிபலிக்கிறது.

எனினும் கோபுர நிலைமீது ராவணன் நிலையைக் கம்பன் ஒரு புதுச் சித்திரமாக்கி விடுகிறான். 'எப்படி?' என்று தெரிந்து கொள்வதற்கு நாம் இந்தக் கம்ப சித்திரத்தை நன்கு நோக்க வேண்டியது தான்.

ஆனால் அதற்கு முன்னுரையாக இந்தக் கட்டுரையில் சில இன்றியமையாத விஷயங்களைத் தெரிந்துகொள்ள முயல்வோம். வால்மீகியின் சுருக்கமான வருணனையைத் துணையாகக் கொண்டு கம்பன் அந்தத் தீங்கவியைத் தேவாமிர்தமாகச் செவிகள் ஆரப் பருகிய வண்ணம்,

பட்டப் பகலிலே
பாவலர்க்குத் தோன்றுவதாம்
நெட்டைப் பகற்கனவின்
நிகழ்ச்சியிலே கண்டேன் நான்



என்று பாரதி வருணிக்கிறாரே அந்த ஆனந்தக் கனவு லோகத்திற்குப் போய் விடுகிறான். போய் அங்கேதான் ராவணனைக் காண்கிறான்.

அந்தக் கனவு லோகத்திலே, (உள் மனத்தினுள்ளே) கம்பன் காணும் ராவணன் தான் கம்ப சித்திரத்தில் பிரதிபலிக்கிறவன். முகத்தோடு அகத்தையும் கண்டு காட்டுகிறான் கவிஞன்.

சீதையை எண்ணி எண்ணி மெலிந்த தோள்களையோ ஏங்கிய உள்ளத்தையோ இங்கே நாம் பார்க்கவில்லை. பூரித்த தோள்களைப் பார்க்கிறோம். அதற்கு மேல் பூரித்துப் போகும் உள்ளத்தையும் உடைய ராவணனைக் காண்கிறோம்.

ஏன் இந்தத் 'திடீர்' மாறுதல்! 'எதிரிகள் வந்து விட்டார்கள்; போர் வந்து விட்டது!' என்ற குதூகலம் வந்து விட்டதுதான் காரணம்.

இந்தக் குதூகலத்தோடு ராவண காம்பீர்யமும் அந்தப் பயங்கர அழகு-மாட்சியும் எப்படி ஜொலிக்கின்றன தெரியுமா!

உடம்பும் உள்ளமும் போட்டி போட்டுப் பூரிக்க, ஒரு பெரிய ராட்சஸப் பாம்பு படத்தைத் தூக்கி நிமிர்வது போல நிமிர்ந்து நோக்குகிறான் ராவணன்.

இச் சந்தர்ப்பத்தில் கம்பனுக்கு இளமையில் கேட்டிருந்த ஒரு புராண கதை நினைவிற்கு வருகிறது. ஒரு பெரிய பாம்பும் காற்றும் போட்டி போட்ட கதை.

ஆதிசேஷனுக்கும் வாயுபகவானுக்குமிடையே தங்களில் யார் வலிமை வாய்ந்தவர் என்பது குறித்து ஏற்பட்ட போட்டியிலே, ஆதிசேஷன் தன் பல தலைகளால் மேருமலையின் பல கொடுமுடிகளையும் மறைத்து அமுக்கிக் கொண்டான். அந்தத் தலைகளை நிமிரச் செய்து அம்மலைச் சிகரங்களில் ஒன்றையாவது பறித்து விடக் கூடுமானால் காற்றுத் தெய்வத்திற்கு அதுவே வெற்றி, இல்லாவிட்டால் ஆதிசேஷனே வலிமையுள்ளவனென்று உலகம் தீர்மானித்து விடும்.

அந்தப் பரீட்சையில் எப்படியாவது வெற்றி பெற வேண்டுமென்று வாயுபகவான் எவ்வளவோ ஆவேசமாக வீசிப் பார்த்தான். உலகத்திற்குத் தான் சேதம்; மலைக்கோ சேஷன் தலைக்கோ சிறிதும் சேதமில்லை.

கடைசியாக உலக நலத்தை முன்னிட்டு ஆதிசேஷன் தயவுடன் ஒரு தலையைத் தூக்கிக் கொள்ள, வாயுபகவான் அந்தக் கோடு முடியைப் பறித்துக் கொண்டு போய்விட்டான். அன்றே அப்போதே வெற்றி, அதுவே வெற்றி என்று கொண்டாடிக் குதூகலமடைந்தான். இது புராண கதை.

இந்தக் கதை நினைவிற்கு வந்ததும் கவிஞனுக்கு ராவணன் கொலுவிருந்த

கோபுரம் மேரு மலை போலத் தோன்றியது. கோபுரத்தின் முடிகளான பொற் கலசங்கள் மேருமலைச் சிகரங்களை நினைவூட்டின. அதில் ஏறி நிற்கும் பத்துத் தலை அரக்கன் பல தலைப் பாம்பு போலக் காணப்படுகிறான்.

ஆனால் புராண கதையிலுள்ள ஆதிசேஷனை வாசுகி என்று குறிப்பிடுகிறான் கவிஞன். மேலும் அக்கதையைத் தன் இஷ்டம்போல் மாற்றிக் கொள்கிறான்.

தன்னோடு போட்டி போடக் கிளம்பிய காற்றை அப்படியே விழுங்கி விடச் சித்தமாகி விட்டதுபோல் அந்த மேரு மலை மீதிருந்த வாசுகி தன் படத்தை அந்த வான வெளியில் தூக்கி நிமிர்ந்தாளும். அத்தகைய நிலையைக் கோபுரத்தின்மீது ராவணன் நிலையாகக் கண்டு கொள்கிறான் கவிஞன்.

படமெடுத்துச் சீறும் ஒரு ராட்சஸப் பாம்பு போலத் தலை நிமிர்ந்து நிற்கும் ராவணனது அந்தத் தலைமீது விளங்குகிறது கொற்ற வெண்குடை. 'திக்கொடு திக்கின் அந்தங்களிலும் நிழல் பரப்பி நிற்கும் குடையல்லவா!' என்று ஒரே வியப்பாய்ப் பார்க்கிறான் அந்தக் குடையைக் கவிஞன்.

வால்மீகி சொல்லும் கொற்ற வெண்குடையை இவ்வாறு வியந்து கண்ட கண்களால், இருபுறமும் வெண்சாமரம் வீசும் அந்த வைபவத்தையும் அனுபவிக்கிறான். ஆம்; கண்ணெதிரே கண்டு அனுபவிக்கிறான்.

ஏனென்றால், சாமரம் வீசும் காற்றிலே மென்மையான உத்தரீயம் அந்தப் பரந்த மார்பில் அங்கு மிங்கும் புரளும் அழகையும் கண்டு கொள்கிறானல்லவா! தோளும் மார்பும் கொழுத்துப் பளபளத்துக் காணும் மலைப்புறத்தை நினைவூட்ட, அதன் மீது நுரைத்துத் தத்தி விழும் அருவித் திரளின் வெண்ணிறத்தை நினைவூட்டுகிறது ராவணன் அணிந்திருக்கும் பால் நிறப்பட்டு உத்தரீயம்.

கொற்ற வெண்குடைக் கீழ், சாமரம் வீசிய காற்றிலே உத்தரீயம் உலாவக் கொலுவிருக்கும் ராவணனுக்கு அருகே நடனமாட வந்திருக்கும் தெய்வப் பெண்களையும் கண்டு காட்டுகிறான் கவிஞன்.

ஆனால் இந்தப் பெண்கள் ஏன் இப்படி அழகிழந்து நிற்கிறார்கள்!

வானகத்திலிருந்து அப்பொழுதுதான் வந்திறங்கிய ஊர்வசிக்கும், தெய்வ பரிமளத்துடன் தேனின் இனிமையே உருவெடுத்தது போலிருக்கும் திலோத்தமைக்கும், புன் சிரிப்பிலேயே பொன்னுலகு காட்டும் தேவரம்பைகளுக்கும் அழகுக்கு என்ன குறைச்சல்! ஆனால் ராவணன் கண்களால் தானே கவிஞன் பார்க்கிறான்!

இவர்களைப் பார்த்ததும் இவர்களுடைய அழகு தெரியவில்லையாம் ராவணனுக்கு. 'ஜானகியின் அழகே அழகு!' என்றுதான் தெரிகிறதாம்.



இவர்களெல்லாம் 'அழகி ஜானகிதான்!' என்றே காட்டிக் கொடுக்கிறார்கள், காக்காய்ப் பொன் பொன்னைக் காட்டு வது போல!

தெய்வப் பெண்களின் அழகிற்குத் தான் கண் இல்லை, ராவணனுக்குக் கேட் கும் காதும் இல்லையா! சாஸ்திரிமார் நூல்களை ஓதுகிறார்கள், செவியின் வழி யாக. ஆனால் அது செவிடன் காதில் ஊதிய சங்கு தானே!

ஆரம்பத்திலே போர்வெறியில் சீதை யைச் சற்று மறந்த போதிலும் மறுபடி யும் விரைவில் வந்துவிட்டது அந்த நினைவு, தேவலோகத்து நடனப் பெண் களைப் பார்த்ததும்!

இப்போது ராட்சஸ சாஸ்திரிமார் சாஸ்திர வாதம் தொடங்கியதும், உள் ளத்திலே 'சீதை, சீதை' என்ற ஒரே ஜபம் தான். ஆருயிர் தேய அதே மௌன ஜபம்தான்!

சாஸ்திரிமார் உரத்துப் பேசுகிறார்கள். எனினும் செவியின் வழி எதுவும் போய் உள்ளம் சேர்வதாகத் தெரியவில்லை. இரண்டெழுத்தொரு பெயருக்குத் தான் இப்போது அங்கே இடம்!

இந் நிலையில் நாரதர் வந்து வீணா கானம் செய்கிறார். அந்த வீணாகானத் திற் கிசைய, ஸாமகீதமும் பாடுகிறார். இப்போது —என்ன அதிசயம்!—ராவ ணன் செவிகளும் உள்ளமும் இந்தக் கீதத்தை அள்ளி விழுங்குகிறனவா, சீதை யையும் சற்று மறந்து.

சங்கீத ரஸிகன் ராவணன் என்பது பிர சித்தமல்லவா! அறிவுக் கலைக்கு இல்லாத சக்தி அழகு நுண்கலைக்கு உண்டு என்ப தும் பிரசித்தம் தானே.

இப்படி யெல்லாம் வால்மீகத்தை மறந்து கம்பன் தன் போக்கிலே கனவு லோகத்தில் உலாவி உலாவிப் பல கோணங்களிலிருந்து ராவணனைப் பார்க் கிறான். எத்தனையோ கட்டுக் காவல் களுக்கிடையே புகுந்து பார்த்து விடு கிறான்.

வாளும் வில்லும் எத்தனை எத்தனை காவல் புரிகின்றன! இரத்தம் கக்கும் விழிகள் எத்தனை! பூமியில் சஞ்சரிக்கும் காவலாளர் எத்தனை! வானத்தில் திரிந்து திரிந்து காவல் செய்பவர் எத்தனை! கடல் போல் முழங்கும் வாத்திய கோஷ எச்சரிக்கைகள் எத்தனை!

இத்தகைய உடற்காவலாளர்களுக் கிடையே புகுந்து பார்க்கிறான் கவிஞன், இன்னிசை பாடும் மங்கையர் கூட்டத்தை யும் பார்த்துப் பரவசமாகிறான். —அந்த இசையிலும் அழகிலும் நெஞ்சைப் பறி கொடுத்து விட்டானோ என்று பிரமிக்கும் படி!

விஷமும் அஞ்சுகின்ற விழிகளைப் பார்க் கிறான். அத்தகைய கொடிய அழகு ராவணனைச் சற்றும் பாதிக்கவில்லை யென்றும் உணர்ந்து கொள்கிறான்.

விஷம் கக்குகிற கண்களையும் பார்க் கிறான். அவ்வளவு கொடிய காவல் ராவணனைச் சுற்றி. ஆம்; கதாயுதமும் கையுமாய்ச் சட்டைக்காரர் பலர் காவல் புரிகிறார்கள். இடிக் குரலில் அதட்டு கிறார்கள் நெருங்கி வருவோரை. இவர் களை யெல்லாம் சுற்றிச் சுற்றிப் பார்க் கின்றன கவிஞன் கண்கள்.

கையிலே பிரம்பும் கண்ணிலே நெருப்புமாய், நின்ற இடத்தில் நில்லா மலே சுற்றிச் சுற்றிக் காவல் புரிந்த வண்ணமா யிருக்கும் காவலாளரையும் கடந்துபோய் ராவணனைக் கூர்ந்து பார்த்துவிடுகிறான் கவிஞன். நீலமேகம் போல் இருப்பதாக வால்மீகி வருணித் திருக்கிறாரே, அந்த நிலையைக் கூர்ந்து பார்த்து விடுகிறான்.

சுற்றி இருப்போரையும், சுற்றி வரு வோரையும் மறந்து, ராவணனை மட் டும் பார்க்கிறான். தோரணம் கட்டி அந்தக் கோபுர மணிவாசலை அடைத்துக் கொண்டிருப்பது போல் நிற்கும் அந்த மேனியையும் பார்க்கிறான். உலகத்தை அடைத்துக் கொண்டிருக்கும் ராவணா காரமான அந்த ஆணவத்தையும் பார்க் கிறான். அந்த ஆணவ தேஜஸ் ராம னைக் கண்டு எதிர் கூசிக் குலைவதையும் கண்டு காட்டுகிறான்.

வால்மீகியின் குறிப்புக்களிலிருந்து தொடங்கி மெல்ல நழுவிப் போய்த் தன் னுடைய ஆனந்தக் கனவுலகு புகுந்து காட்சி மேல் காட்சியாகக் கண்டு கொண்டே போகிறான்; வால்மீகியை நினைத்துக் கொண்டு விழித்துக் கொள் கிறான்.

வால்மீகத்தை ஆதாரமாகக் கொண்டு கற்பனை – விண்ணிலே, கனவு லோகத் திலே, கம்பன் கண்ட காட்சியை என் வசனத்தில் ஒருவாறு முன்னுரையாகக் காட்டினேன். தான் கண்ட காட்சியைக் கவிஞன் எப்படிக் காட்டுகிறான் என் பதை அடுத்த வாரம் பார்ப்போம். அதில் தானே கவிதை இருக்கிறது!

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

60. ஆணவத்தின் விசுவரூபம்

கடற் கொள்ளைக்காரன் ஒருவன் ஒரு நாள் கடலையும் வானையும் நோக்கிக் குதூகலம் அடைந்தான். அடைந்ததும் ஒரு பெருந் துஷ்டச் செயலில் ஈடுபட வேண்டுமென்று துணிந்தானும்.

கடற்பாறை ஒன்றில் ஒரு பெரிய மணியைக் கட்டி வைத்திருந்தார் ஒரு பரோபகாரி. வெள்ளம் பொங்கி அப் பாறையை மூடியிருக்கும்போது அலைக ளால் அம் மணி அடிக்கப்படும். அந்த மணியோசை அவ்வழியே செல்லும் கப் பல்-யாத்திரிகர்களுக்கு ஓர் எச்சரிக்கை யாகும். அந்த மணி கட்டியிருந்த வடக் கயிற்றை அறுத்தெறிந்து அதைக் கட லுக்குள் தள்ளிவிட வேண்டுமென்பது குதூகலத்திலே அக் கொள்ளைக்காரன் உள்ளத்தில் போட்டுக் கொண்ட திட் டம்.

திட்டத்தையும் நிறைவேற்றி வைத் தான். அதனால் உயிரிழக்க நேர்ந்தவர் களில் அக் கொள்ளைக்காரனும் ஒருவன் என்று கதை முடிகிறது.

ராவண குதூகலமோ, ராமனது வானர சேனையின் பெருமையைச் சார ணன் விளக்கிய பின், 'அந்தக் குரங்கு களால் நம்மை ஒன்றும் செய்யவே முடி யாது' என்று சிறுநகையுடன் பரிக சிக்கச் செய்கிறது. 'மான்கள் சிங்கத் தின் மீது பாயுமா!' என்று இகழ்ந்து பேசச் செய்கிறது. அதே சமயம் சுக்கிரீ வன் ராவணன்மேல் பாய்ந்து விடுகிறான், மகுட பங்கமும் செய்து விடுகிறான் என்று கதை மேலே போகிறது.

* * *

ராமனது வானர சேனையைக் காண வேண்டுமென்று குன்று போன்ற ஒரு கோபுரத்தின் மீது ராவணன் பரிவாரங் களோடு ஏறி நிற்கிறான். இந்தக் கோபு ரம் இலங்கை வடக்கு வாசலில் இருக் கிறது.

இக் கோபுரத்தின் மீது நின்று சுவேலம் என்ற குன்றிலுள்ள எதிரியின் சேனைப் பெருக்கைப் பார்வையிடும் ராவண னுடைய பரிவாரத்தில், ஏற்கெனவே ஒற்றுப் போய்வந்த சுக சாரணர்களில் சாரணன் என்பவன் காணப்படுகிறான். ராவணன் கம்பீரமாக நின்று பார்த்து எதிரிகளான வீரர்களின் பெயரையும் திறத்தையும் சாரணன் வாயிலாகத் தெரிந்து கொள்ளப் போகிறான்.

முதன் முதல் ராவணன் நிற்கும் மாட் சியை வருணிக்கிறான் கவிஞன். தேவி யைப் பிரிந்த நிலையில் குதூகலமின்றி ராமன் இலங்கையைப் பார்க்க, ராவணனோ குதூகலத்துடன் நோக்கு கிறானும் :

பொலிந்த தாகும்இது
போர்என லோடும்,
மலிந்த நங்கைஎழி
லால்வலி நாளும்

மெலிந்த தோள்கள்வட
மேருவின் மேலும்
வலிந்து செல்ல,மிசைச்
செல்லு மனத்தான்.

[மலிந்த நங்கை எழிலால் – சீதா பிராட்டியின் மிக்க அழகால். வலி நாளும் மெலிந்த – வலிமை நாளுக்கு நாள் மெலிந்த. மேருவின் மேலும்–மேருவைக் காட்டிலும். வலிந்து செல்ல – வலிமை பெற்று வளர. மிசைச் செல்லும் மனத் தான் – அந்த வலிமைக்கும் மேலே வளர்ந்து போய்க் கொண்டிருக்கும் மனப் பூரிப்பை உடையவனானான்.]

ஆரம்பமே குதூகலம் அளிக்கத் தக்க முறையில் அமைந்து, ரஸிகர் உள்ளங் களை மேலும் மேலும் பூரிக்கச் செய்யும் ஓர் இசை-விருந்திற்குச் சித்தமாக்கி விடுகிறது.

மிதமிஞ்சிய துஷ்ட குதூகலத்தால் படமெடுக்கும் ராவண - ஆணவத்தை இசைச் சித்திரத்திலே காண்போம் :


செம்பொன் மௌலிசிக
　　ரங்கள் தயங்க,
அம்பொன் மேருவரை
　　கோபுர மாக,
வெம்பு காலினை
　　விழுங்கிட மேனாள்
உம்பர் மீதில்நிமிர்
　　வாசுகி ஒத்தான்.

[மௌலி – கலசங்களைக் கொண்ட முடிகள். சிகரங்கள் தயங்க – சிகரங்களைப் போல் விளங்க. மேரு வரை – மேரு மலை. வெம்பு காலினை – மனம் புழுங்கித் தன்னை எதிர்க்க வந்த வாயுவை. உம்பர் மீதில் – வான வெளியின் மீது.]

ஒரு பெரும் பாம்பு படமெடுத்துச் சீறும் கோர அழகைக் காண்கிறோம், ராவணனது ஆணவம் நிறைந்த குதூகலத்திலும், கோபம் வீசும் கண்களிலும் முகத்திலும்.

இந்த ஆணவப் பேருருவின்மீது ஏகாதிபத்திய சின்னமாக விளங்கும் கொற்ற வெண் குடையைச் சற்று நோக்குவோம். இந்தக் குடையும் தனக்கு இசைந்ததொரு தனி இசைச் சித்திரம் பெற்றிருக்கிறது :

தொக்க பூதம்அவை
　　ஐந்தொடு துன்னிட்(டு)
ஒக்க நின்றதிசை
　　ஒன்பதொ டொன்றும்
பக்க முந்நிழல்
　　பரப்பி, வியப்பால்
மிக்கு நின்றகுடை
　　மீது விளங்க.



[தொக்க – ஒன்று கூடிய. பூதம் அவை ஐந்தொடு – பஞ்ச பூதங்களோடு. துன்னிட்டு – நெருங்கி. ஒன்பதொடு ஒன்றும்—பத்துத் திசைகளிலும்]

ராஜ சின்னங்கள் தருகிற மாட்சியைக் காட்டிலும், ராவணனுடைய வீரத் தோள்களின் மாட்சியும் பரந்த மார்பின் மாட்சியும் மேலானவை என்பதை இப்போது காட்ட விரும்புகிறான் கவிஞன்.

அந்தத் தோள்களையும் மார்பையும் சாமரம் வீசுகிற காற்றால் அசைந்துலாவும் உத்தரீயம் மறைத்தும் திறந்தும் காட்டுகிற இசைச் சித்திரம் இது :

கைத்த ரும்கவரி
　　வீசிய காலால்,
நெய்த்தி ருண்(டு)உயரும்
　　நீள்வரை மீதில்
தத்தி வீழருவி
　　யின்திரள் சால
உத்த ரீகம்நெடு
　　மார்பின் உலாவ.

[கை தரும் கவரி – கை ஏந்துகிற சாமரம். காலால் – காற்றால். நெய்த்து– கொழுத்துப் பளபளத்து. நீள் வரை – நீண்ட மலை. திரள் சால – திரளின் தன்மை நிரம்பும்படி. உத்தரீகம் – உத்தரீயம்.]

ஒன்றின்னொன்று உச்சமாக வந்து மறைகின்றன இசைச் சித்திரங்கள். வானத்திலிருந்து நழுவியதொரு சித்திரம் போல வந்து நிற்கும் ஊர்வசியும், இனிமை பரிமளிக்கும் திலோத்தமையும், 'ஒரே புன்னகைக் கூட்டம்' என்று சொல்லும்படி உல்லாசமே உருவெடுத்தது போலிருக்கும் தேவரம்பையர் குழாமும் — நடனமாடி ராவணனை மகிழ்விக்க வந்தவர்கள் — இப்போது என்ன செய்கிறார்கள் !

'ஜானகிதான் அழகுள்ளவள் !' என்று சத்தியம் செய்து கொடுப்பவர் போலக் காணப்படுகிறார்களாம் :

வான கத்தினில்
　　உருப்பசி, வாசத்
தேன கத்தரு
　　திலோத்தமை,
　　　　செவ்வாய்
ஏன கைக்குல
　　அரம்பையர்
　　　　யாரும்
சான கிக்கழகு
　　தந்தயல் சார.

[வாசத் தேன் அகத் தரு–தேனின் இனிமையானது மணங் கமழும் ஓர் உருவம் பெற்று வந்து நிற்பவள். ஏல் நகைக்குல அரம்பையர் – தங்களுக்குப் பொன்னகையைக் காட்டிலும் இசைந்திருக்கும் புன்னகைகளோடு கூடிய தேவரம்பையர்.]

இப்படிச் சீதையின் அழகு எதிர்பாராத நிலையில் நினைவிற்கு வந்துவிடு



கிறது. பேராசையில் சற்று மறைந்திருந்த அந்தப் பேயாசை முன்போல் உள்ளத்தை ஆட்கொண்டு விடுகிறது :

ஓத நால்கள்செவி
யின்வழி உள்ளம்
சீதை சீதைஎன
ஆருயிர் தேய,
நாத வீணை இசை
நாரதர் பாட
வேத கீதஅமிழ்(து)
அள்ளி விழுங்க.

இந்த அதிசயமான இசைச் சித்திரத்திலே, பேராசையில் சீதை மீதுள்ள ஆசை சற்று மறைந்தது போல் கீதநாதத்திலும் (அதாவது ராவணனது ரசிகத் தன்மையிலும்) அந்தப் பேயாசை கொஞ்சம் ஒடுங்கிப் போகும் அதிசயத்தையும் காண்கிறோம்.

இந்த நிலையில் ராவணனைச் சூழ்ந்திருக்கும் கட்டுக் காவலை இரண்டு பாடல்களில் காண்கிறோம். விணாகானம் இடிக் குரலாக மாறுகிறது இந்த இசைச சித்திரத்திலே :

வெங்கரத்தர் அயில்
வாளினர் வில்லோர்,
சங்கரற்கும் வலி
சாய்வில் வலத்தோர்

அங்க ரக்கர்சத
கோடி அமைந்தோர்
பொங்க ரத்தவிழி
யோர்புடை சூழ.

[வெங் கரத்தர் – கொடிய கையை யுடையவர்கள். அயில் வாளினர் – கூர்மையான வாளை உடையவர்கள். சங்கரற்கும் – ஸம்ஹார மூர்த்தியாகிய சிவபெருமானுக்கும். வலி சாய்வில் வலத்தோர் – வலிமை குறையாத பலத்தை உடையவர்கள். அங்கரக்கர் – அங்க ரட்சர் என்ற உடற் காவலாளர். சதகோடி அமைந்தோர் – இவர்கள் தொகை சதகோடியோ என்று பிரமிக்கத்தக்க மிடுக்கரான அரக்கர்கள். பொங்கு அரத்த விழியோர் – இரத்தம் பொங்கும் விழியினர். புடை – பக்கத்திலே.]

பாரி யங்குநர்,
விசும்பு பரந்தோர்,
வாரி யங்கு மழை
யின்குரல் மானும்

பேரி யங்கள் முரு
டாகுளி பெட்கும்
தூரி யம்கடலின்
நின்று துவைப்ப.

[பார் இடங்குநர் – பூமியில் சஞ்சரிப்பவர். விசும்பு பரந்தோர் – ஆகாய வீதியில் பரந்து காணப்படுவர். வார் இயங்கு – நீருடன் சஞ்சரிக்கிற. மழையின் குரல் மானும் – மேக கர்ஜனையை ஒத்த. பேரியங்கள், முருடு ஆகுளி பெட்கும் தூரியம் – பேரியங்கள் முரடு ஆகுளி என்ற விரும்பத்தக்க வாத்தியங்கள். கடலின் நின்று – கடலைப்போல நின்று. துவைப்ப – ஒலிக்க.]

ஒருபுறம் இன்னிசை பாடுவோர்; ஒரு புறம் இடிக்குரலில் பேசும் சட்டைக்காரர்கள். இந்த இரண்டு முரண்பட்ட காட்சிகளும் இசையில் பேசுவதைக் காணலாம் :

நஞ்சும் அஞ்சுவிழி
நாகியர் நாண
வஞ்சி அஞ்சும்இடை
மங்கையர், வானத்(து)

அஞ்சொல் இன்சுவை
அரம்பைய ரோடும்
பஞ்சு ரம்சிவணும்
இன்னிசை பாட.

[நாகியர் - நாக ஸ்திரீகள். நாண - நாணும்படியுள்ள. வஞ்சி-வஞ்சிக் கொடி. இடை மங்கையர் - இடையுள்ள (இவ்வுலகப்) பெண்கள். பஞ்சுரம் – பாலைப் பண். சிவணும் – ஒத்த.]

நஞ்சு கக்கியெரி
கண்ணினர் நாமக்
கஞ்சு கத்தர்கதை
பற்றிய கையர்

மஞ்சுகக் கக்குமுறு
சொல்லினர், வல்வாய்க்
கிஞ்சு கர்கிரி
ஒத்தனர் சுற்ற.

[நாமக் கஞ்சுகத்தர் – கஞ்சுகியர் என்ற சட்டைக்காரரான சேவகர்கள். கதை – தடி. மஞ்சு உக – மேகம் உதிர்ந்து விழும்படி. குமுறு – குமுறி ஒலிக்கிற. வல்வாய்க் கிஞ்சுகர் – வலிய வாயாகிய முருக்க மலரை உடையவர்; அதாவது உண்ட மாமிசத்தின் இரத்தத்தையும் கழுவாத வாயை உடையவர்; கிரி – மலை.]

இவர்களைத் தொடர்ந்து பிரம்பு பிடித்த கையும் நெருப்பைக் கக்கும் கண்ணுமாய் வரும் காவலாளரையும் பாருங்கள் :

வேத்தி ரத்தர்,எரி
விசி விழிக்கும்
நேத்தி ரத்தர்,இறை
நின்றுழி நில்லாக்

காத்தி ரத்தர்,மனை
காவல் விரும்பும்
சூத்தி ரத்தர்பதி,
னுயிரர் சுற்ற.

[வேத்திரத்தர் – பிரம்பு பிடித்தவர்கள். நேத்திரத்தர் – கண்களை உடையவர். இறை – ஒரு நொடிப் பொழுதாவது. நின்றுழி – நின்ற இடத்தில். காத்திரத்தர் – உடம்பினர். சூத்திரத்தர் – சூட்சுமமான தன்மை யுடையவர்கள்.]

இவ்வளவு படாடோபமாக, இவ்வளவு குதூகல – கோலாகலத்துடன் தோரண மணி வாசல் மீது காணப்படும் ராவணனையும், இந்த ராவணேச்வரனுக்குக் கிடைத்த ராம தரிசனத்தையும் பாருங்கள் :

தோர ணத்தின்மணி
வாயில் மிசைச்சூல்
நீர ணைத்தமுகி
லாமென நின்றான்,

ஆர ணத்தமுதை
அம்மறை தேடும்
கார ணத்தைநிமிர்
கண்கொடு கண்டான்.